கலா நிலயம்.

V.5. No.27 14.7.1932

M211,N28K N
N32.5.27
199141

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

5 - AUG - 32

Vol 5.] 1932 ஹு ஜூலை மீ 14உ [No. 27

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	521
2.	தமிழ்ப்பாடம் நளவெண்பா - கலிதொடர்காண்டம்	523
3.	பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா T. R. இராஜகோபால்	525
4.	குன்றுடையானும் மக்களும் W.V. கோவிந்தசாமி ராஜு B.A.,L.T.	526
5.	அப்பர் (64 கலைகள்—தர்க்கம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L.	527
6.	எல்லாம் வீணே (ஓர் சிறுநாடகம்) G S. இரகுராமன் B.A.,	529
7.	பொதிகைநிகண்டு S. வையாபுரிப் பிள்ளை B.A.. B.L.,	531
8.	ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 4. களம் 2) ஷேக்ஸ்பியர் நாடகம்	533
9.	நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து, 3-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L.,	535
10.	ஷெல்லி—P. C. ஜயவேலு	536
11.	மதிப்புரை—தேவி உபநிஷத் தீபிகை	539
12.	வர்த்தமானம்	539

கலாநிலயம்

விருப்பமும் கருவியும் 2.

இலக்கியங் கண்டதற் கிலக்கணம்இயம்புதல் வேறு, உலகியலில் காண்பதற் கியம்பவேண்டிய இலக்கணம் வேறு. நான் என்பதன் பன்மை நாம் எனக் கூறுவார் இலக்கணிகள். மற்று, பொதுமைபற்றி விவகரிக்குங்கால் மானுடமனது தன்னை யறியாமலே புரிகின்ற சூழ்ச்சிகளின் இரகசியங்களை உற்றுத் துருவித் தெளிகின்ற காட்சியில், நாம் என்பது ஒருவகையில் நான் என்பதன் எதிர்மறையாகத் தோன்றுகின்றது. எனின், பதவியலில் அது பன்மை என்றும் பொதுவியலில் எதிர்மறை யென்றுங் கொள்ளலாம்.

சற்றே இதனை உற்று நோக்குவோம். பொய்ச் சூதாடுதற்குப் புட்கரனைக் கொண்டுவந்திருக்கின்றான் கலி. நளனும் உடன்படுதற்கிருக்கின்றான். நன்மையுந் தீமையும் தம் நாயகற்கு நாடிச்சொல்லும் வீரர்களாயமைந்த அவன் அமைச்சர், கவறுடலின் கொடுமையைப் பலபடி எடுத்துக்காட்டுகின்றனர். பண்டை வினைப்பயன் பெரிதுவந்து உறுத்தியதாதலின் நளன் செவியேற்காமல்,

> தீது வருக நலம்வருக சிந்தையால்
> சூது பொரவிசைந்து சொல்லினேம்—யாதும்
> விலக்கலிர்நீ ரென்றான் வராலேற மேதி
> கலக்கலை நீர்நாடன் கனன்று

என்று புகன்றன னென்பர் புகழேந்திப்புலவர். சூது பொர இசைந்துசொல்லியது, நளன் ஒருவனேயாக, யாரை உளப்படுத்தி 'நாம்' என்கின்றான்? அரசர் தேவர் பெரியோர் (இவ்வினத்தில் பத்திரிகைஆசிரியர்களும் சேர்ந்துகொள்கின்றனர்) அனையவர்திறத்தில் ஒருமையிற் பன்மைவருகின்ற வழு அமையும் என்பது ஆங்கிலவழக்குப்போல் தமிழ்வழக்கிற்கும் ஒக்கும். எனினும் இவ்வழக்கிற்கு வித்தாகிய கருத்தினை உற்றுநோக்கிச் சிந்தித்தல்வேண்டும். அரசன் 'நாம்' என்று பேசும்போது, மற்றவர்களுடன் தன்னையும் பொதுமையாக்குகின்ற உருவமுடைய இவ்வுளப்பாட்டு வாசகம் அப்பொதுமைக்கு நேர்மாறான வோர் நிலைமைக்கு இடமாயிருக்கின்ற இரகசியம் தெரியவருகின்றது. "நான் ஒருவன் ஒரு பக்கம், நீங்கள் அனைவரும் மறுபக்கம். இதனில் யான் அரசன் ஆதலின், உங்களுடன் என்னை ஒருங்குசேர்த்து எண்ணவேண்டா. நான் தனிச் சிறப்பு உடையவன். என்னுடைய சிந்தனையின்படி நான்நடக்கவல்லேன்; என்னுடைய ஆணையில் அடங்கியிருக்கின்ற நீங்கள் அனைவரும் என்னைத் தடுக்கவல்லீர் அல்லீர்" என்ற பொருள்எல்லாம் இந்த 'நாம்' என்னும் தோன்று எழுவாயில் இங்குத் தோன்ற நிற்கின்றது. இவ்வண்ணம் 'நாம்' என்னும் பொதுமைஎண்ணத்தை மறுத்துத் தான் என்னும் தனிமையை வற்புறுத்துவதற்கு வருவதால், நாம் என்னும் பன்மைவடிவம், பன்மையைக் குறிக்காமல் எதிர்மறைப்பொருளை ஏற்கின்ற சூழ்ச்சியில் ஆழ்ந்திருக்கின்ற அருமையை இனித் தெரிந்துகொள்ளலாம். இப்படியே, அரசர் தேவர்

ஆசிரியர் அனையவர் "ஒருநான்" என்று தனிச்சிறப்பை வற்புறுத்துவதற்குப் பதிலாய் 'நாம்' என்ற வாசகத்திற்குள் மற்றவர்களையுந்தழுவிக்கொள்பவர்போல் பாவிக்கின்றனர். இந்த நுண்மையை நோக்குதற்கு அரசர் அளவுகூடப் போகவேண்டா. எங்கெங்கு ஒருவன் தன் தனிச்சிறப்பை உட்கொண்டு பேசக்கருதுகின்றனனோ, அங்கங்கே, 'நாம்' என்னும்பன்மைவந்து பயிலக்காணலாம். தாயுமானவர், அந்தகனை விளித்து, "செல்லாதடா உன்காசுநப்பால்" என்றபோது, "மற்றவரிடத்தில் செல்லும், என்னிடத்தில் மாத்திரம் செல்லாது" என்று தன்னைப் பிரித்துக்கொள்வதற்கே 'நம்' என உளப்படுத்தினர். இனி, இக்கொள்கைக்குஉதாரணமாகத் தாயுமானவரே யனையவித்தகரும் வேண்டா. தெருச்சண்டைகளிலும் இந்தச் சிறு விந்தையைக் காணலாம். "நம்மகிட்ட உன் கைவரிசையைக் காட்டாதே" என்றும், "இதற்கெல்லாம் அஞ்சுவோமோ நாம்" என்றும் பேசும்போது ஒருவன் தன்னுடைய தனித்தன்மையே மற்றவர்க்கு மாறாய் வற்புறுத்தப் பெறுகின்றதென்பது வெளிப்படை. இவையனைய பிறவும், பன்மையுருவம் பொதுமையை விலக்கவேண்டும் என்னும் நினைவினால் பயிலப் பெறுவதற்கு உதாரணங்களாகும். இங்கு 'நாம்' என்னும் பன்மை, நானே என்பதற்குப்பதிலாய்ப் பிரிநிலைப் பொருளுடையது. இனி இவ்விடயங்களை மனத்திற்கொண்டு, அரசியல்வாதிகள் சீர்திருத்தக்காரர்கள் கட்சித்தலைவர்கள் முதலியோர் பொதுஜன முன்னேற்றத்தின்பொருட்டுத் தொண்டுபுரிபவராய்ச் செய்கின்ற பிரசங்கங்களில் 'நாம்' என்னுஞ்சொல் என்ன நினைவுடன் நடக்கின்றது என்பதைப் பார்ப்போம். அதனை ஆராய்ந்தறிந்தால், H. G. வெல்ஸ் போன்றவர்கள் தாமுமறியாமலே முரண்படப் பல செய்திகள் மொழிய நேர்கின்ற வரலாற்றின் காரணம் ஒருவாறு புலப்பட இயலும் என்று எண்ணுகின்றோம்.

கட்சித்தலைவர்கள் கட்டுரைகள் நிகழ்த்தும்போது, "நாம் எல்லாரும் ஒற்றுமையாகி இருக்கவேண்டும், இல்லையேல் நம்முடைய முன்னேற்றம் ஒருபோதும் கைகூடாது" என்று ஒரு அறிவுமொழி எடுத்துரைக்கக் கேட்கின்றோம். இதன்பொருள் வெளிப்படை எனினும் கருமத்தளவில் இவ் வொற்றுமைவிருப்பம் எவ்வாறு நடைபெறுகின்றதென்பதைச் சோதிக்குங்கால் சிற்சில நினைவுகள் எழுகின்றன. ஒற்றுமையாயிருக்க வேண்டும் என்று உடன்படிக்கை செய்துகொண்ட இருவர் பிறகு எக்காரணத்தினாலாயினும்பிரிவாராயின் அதன் பொறுப்பு ஒருவரைமட்டுமே சார்ந்ததாகாது: ஒற்றுமையற்றகுற்றம் ஒவ்வோரளவு இருவருக்கும்உரியதாகின்றது இருதிறத்திலும் பிழையில்லையெனில் சண்டையுமில்லை. ஒற்றுமையின் உயர்வை உரைத்தவரே பெரும்பாலும் கலகத்திற்குக் காரணமாவதையுங் காணலாம். இதனால், ஒற்றுமையின் அவசியத்தைஎடுத்துப் பேசியபோது அவர் அவ்வவசியத்தை நம்பவில்லை போலும் என்று எண்ணலாகாது. வேறு எத்திறத்தில் அவர் எவ்வாறாயினும் இத்திறத்தில் அவர் பொய்யர் அல்லர். ஒற்றுமையின் உண்மையையே உன்னி உரைத்தார்; ஆயினும், வாயொன்று சொல்ல அவர் மனமானது தனக்குள்ளே வேறொன்றுஎண்ணிக்கொண்டது. "நாம் ஒற்றுமையாய் இருக்கவேண்டும்" என்று வற்புறுத்துவதன் பொருளெல்லாம் அந்தத்தில் முடியும் வகை அனைவரும் அறிந்ததே. அன்பின் அவசியமும் அன்னதே. இத்தனை வற்புறுத்தி எல்லோரும் எங்கெங்கும் ஒற்றுமையையும் அன்பையும் பற்றிப் பேசத் துவக்குமுன் இருந்த ஒற்றுமை அன்புகளில் கால்பாகங்கூட உலகத்தில் இப்பொழுது நடமாடவில்லையென்பது வெள்ளிடைமலை. இக்குறைவிற்குக் காரணம் அந்தப் பேச்சேதான் ஆகுமோ என்ற ஐயம் ஒருபுறம் இருக்க, விளைவினைக் காணுந்தோறும் வியப்பினும் வருத்தமே அதிகமாகின்றது. விளைவு பெரியதாயினும் வித்துஞ்சிறியது, அவ்வித்தினுள்ளிருக்கும் முளை அதனினுஞ் சிறியது. வித்தைப் பிளந்தால் அச்சிறிய முளையைக் காணலாம். "நாமெல்லாரும் ஒற்றுமையாயிருக்கவேண்டும்" என்பதை விண்டு நுதக்கண்ணாடிகொண்டு பார்ப்போமாயின் தெரியவரும் கருத்தென்ன? "நான் சொல்லும்படி நீங்களெல்லாரும் கேட்கவேண்டும்; நீங்கள் சொல்லும்படி நான் கேட்கமாட்டேன்" என்பதன்றி வேறன்று. காரிய முறையில் இந்தப் பொருளன்றி ஒற்றுமைக்கு வேறு ஏதேனும் எஞ்சியதுண்டோ! ஆதலின், "நான் ஒற்றுமையாயிருப்பேன்" என்னும் வாக்கியத்தின் நேர்எதிர்மறையே "நாம் ஒற்றுமையாயிருப்போம்" என்னும் வாக்கியம் ஆகிவிடுகின்றது. இப்படியே, 'நாம்' என்ற சொல் பொதுமைபடப் பயிலும் இடம் எல்லாம், அந்த உளப்பாட்டு உருவத்தினுள் எதிர்மறை கரந்திருப்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். இதற்கு எதிர்நிலையிலும் உண்மை உளது. 'நாம்' என்று துவக்குகின்ற வாக்கியம் எதிர்மறை வாய்பாட்டில் இருக்குமாயின், அதனுள் அடங்கிய 'நான்' மாத்திரம் உடன்பாடாகின்ற கருத்துப் புலப்படும். "சனங்களுடைய முன்னேற்றத்திற்கு நாம் போதிய அளவு முயல்வதில்லை" என்றொருவர் இடித்துரைக்கையில் அவர் மனத்தினுள் தவழும் எண்ணம் என்ன? "நான் முயல்கின்றேன், நீங்கள்தாம் முயல்கின்றதில்லை" என்ற வகையன்றோ இதன் இரகசியம். இதனின்று இவ்வினத்தைச் சேர்ந்துவரும் வாக்கியங்களில் நிற்கின்ற 'நாம்' அதன் பயனிலை மறுக்கின்ற வொன்றைத் தன்வரையில் மீண்டும் மறுத்து உடன்பாடாக்கிவிட்டது. ஈரெதிர்மறைகள் ஒருடன்பாடாவது விதி. 'நாம்' என்பதில் அடங்கியுள்ள 'நான்' என்பது மாத்திரம் உடன்பாடாகின்ற இது அவ்விதியின் பயனாய் மனத்தின்கண் விளைகின்ற ஒரு சிறு இந்திரசாலம் என்னலாம்.

சென்றநாள் நாம் பெயர்த்தெழுதிய கட்டுரைப் பாகத்தில் H. G. வெல்ஸ் என்பவர், ஆயிரமாயிரமாகிய மனிதர் வறுமையும் தாழ்வும் மெய்யுழைப்பின் தளர்ச்சியும் எய்திமிக வருந்துவார்களாகிக் கிடக்கின்ற இந்நாள், ஆட்சி அதிகாரங்கள் தம் கையிலே தங்கப்பெற்ற சிலர், இக்கொடுமையைத் திருத்துவதற்கு யாதும் நினைத்தலின்றித் தம் ஆக்கமே கருத்தாய் விவகரிப்பதுமன்றிப் பொதுஜனங்களின் மதிப்பிற்கும் வியப்பிற்கும் உரியராவதற்குப் பற்பல கபடநாடகங்கள் நடித்துக்கொண்டிருக்கினர் என்று குறை கூறலாயினர். இவ்வாறு குறைகூறும் கட்டுரையின் இடையில் இரண்டு வாக்கியங்கள் வந்திருக்கின்றன. அவ்விரண்டில் ஒன்று, "உலகத்தை முழுவதும் தழுவிக்கொண்டு செவ்வி தின்நடந்தவல்லமுறையினைக் கைக்கொண்டு மாற்றுதற்கு நாம் ஒருவரும் தெளிவுற அறியவில்லை"—என்பது; மற்றது, "நம்மிற் பலர்க்கு உணர்ச்சியில்லை" என்பது. இவ்விரண்டுவாக்கியங்களிலுள்ள 'நாம்' என்பதன் இரகசியக் கருத்தை முன்னிங்கு சொன்ன இலக்கணங்களைக் கொண்டு ஆராய்ந்து பார்ப்பவர்க்கு வேறு சில சொல்ல வேண்டா. "உலகத்தைச் செம்மையாக்கும் வழி எனக்குத் தெரியும், உங்களுக்குத் தெரியாது; உணர்ச்சி எனக்குண்டு, உங்களுக்கு இல்லை" என இடித்துரைக்கும் கருத்தினால் இவ்வாசகங்கள் நிகழ்ந்தன. "நான் சொல்வதை நீங்கள் கேட்டால் எல்லாம் உருப்படும்" என்ற பெருமிதத்திற்கியன்ற குரலது இது. எனினும், ஜனங்களின் இன்பமும் நன்மையும் பெருகுவதற்கு H. G. வெல்லஸ் எனும் அவர் போன்று பேசுகின்ற பிறரேனும் என்ன முறை வகுத்திருக்கின்றாரென்றேனும் என்ன செய்திருக்கின்றாரென்றேனும் யாரும் அறிந்ததில்லை. உண்மையே நோக்கின் அவர்தாமும் அறியார்.

தமிழ்ப் பாடம் 27.

நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[505-வது பக்கத் தொடர்ச்சி]

பாவையர்கை தீண்டப் பணியாதார் யாவரே
பூவையர்கை தீண்டலுமப்பூக்கொம்பு—மேவியவர்
பொன்னடியிற் றாழ்ந்தனவே பூங்குழலாய் காணெ
மின்னெடுவேற் கையான் விரைந்து [ன்றான் 3.

பதப்பிரிவு:—பாவையர் கை தீண்ட பணியாதார் யாவரே பூவையர் கை தீண்டலும் அ பூ கொம்பு மேவி அவர் பொன் அடியில் தாழ்ந்தனவே பூங்குழலாய் காண் என்றான் மின் நெடு வேல் கையான் விரைந்து.

அன்வயம்:—மின் நெடு வேல் கையான் விரைந்து "பூவையர் கைதீண்டலும் அப்பூகொம்பு மேவி அவர் பொன்னடியில் தாழ்ந்தனவே—பாவையர் கைதீண்டப் பணியாதார் யாவரே—பூங்குழலாய், காண்" என்றான்.

பதவுரை.

மின் - மின்னுகின்ற
நெடு - நீண்ட
வேல் - வேலாயுதத்தை ஏந்திய
கையான் - கையையுடைய நளன்
விரைந்து - விரைவாக,
"பூவையர் - மாதர்களது
கை - கைகள்
தீண்டலும் - பட்டதும்
அ - அந்த
பூ-மலர்கள் நிறைந்த
கொம்பு - கிளைகள்
மேவி - விரும்பி
அவர் - அம்மாதர்களின்
பொன் - அழகிய
அடியில் - பாதங்களில்
(ஒன்றும் வியப்புமில்லை; ஏனெனில்)
தாழ்ந்தனவே-வணங்கினவே, (எனினும், இதில்
பாவையர் - மாதர்கள்
கை - கையால்
தீண்ட - தொட்டவுடன்
பணியாதார் - வணங்காதவர்
யாவரே - யாரிருக்கின்றனர் (ஒருவருமில்லை),
பூ - அழகிய
குழலாய் - கூந்தலையுடைய (தமயந்தியே)
காண் - பார்"
என்றான் - என்று காட்டிக் கூறினான்.

விரிவுரை:—நளனது தேர் சென்ற வழிக்கருகே நிகழ்ந்த நிகழ்ச்சிகளுள் இதுவொன்று. பூத்தலர்ந்த கொடிகளை மாதர் எட்டிப்பற்றினவுடன் அவை வளைந்து அவர்களது காலிற்படும்படி சாய்ந்தன. உணர்ச்சியற்ற மரங்களே மாதர் கைபட்டதும் அவர்களுக்கு அடிமை ஆகின்றனவென்றால் புருடர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ என, அசதி ஆடுவானாய் நளன் தமயந்தியிடம், "பாவையர் கைதீண்டப் பணியாதார் யாவரே" எனக்கூறியபோது அவளுஞ் சிறிது புன்னகை எய்தியிருப்பாள். யாவரே என்பதிலுள்ள ஏகார இடைச்சொல் ஒருவருமில்லை என்ற எதிர்மறைப் பொருளையும், "புருடாது கதி பேதைமையால் இவ்வாருயிற்றே" என்ற இரக்கப்பொருளையும் குறித்து வந்திருக்கின்றது.

மங்கை யொருத்தி மலர்கொய்வாள் வாண்முகத் [தைப்
பங்கயமென் றெண்ணிப் படிவண்டைச்—செங் [கையாற்
காத்தாளக் கைம்மலரைக் காந்தளெனப் பாய்தலுமே
வேர்த்தாளைக் காணென்றான் வேந்து. 4.

பதப்பிரிவு:—மங்கை ஒருத்தி மலர் கொய்வாள் வாள் முகத்தை பங்கயம் என்று எண்ணி படி வண்டை செம் கையால் காத்தாள் அ கை மலரை காந்தள் என பாய்தலுமே வேர்த்தாளை காண் என்றான் வேந்து.

பதவுரை.

வேந்து - நளராஜன்,
"மலர் - மலர்களை
கொய்வாள் - பறிக்கின்றவளாகிய
மங்கை - பெண்
ஒருத்தி - ஒருத்தியின்
வாள் - ஒளிபொருந்திய
முகத்தை - முகத்தினை
பங்கயம் - தாமரை
என்று - என்று
எண்ணி - தப்பாக நினைத்து
படி - வந்து படிகின்ற
வண்டை - வண்டுகளை (அவள் தன்)
செம் - சிவந்த
கையால் - கைகளால்
காத்தாள் - தடுத்தாள். (ஆனால் அவ்வண்டுகளோ)
அ - அந்த
கை - கைகளாகிய
மலரை - மலர்களை
காந்தள் - காந்தள்மலர்
என - என்று நினைத்துப் (பின்னும்)
பாய்தலுமே - பாய்வதனால்
வேர்த்தாளை - வியர்க்கின்றவளை
காண் - பார்"
என்றான் - என்று சொன்னான்.

விரிவுரை:—பொழில்விளையாட்டைச்சேர்ந்த இன்னொரு நிகழ்ச்சியை நளன் தமயந்திக்குக் காட்டுகின்றான். மாதர்முகம் தாமரைமலரையும், அவர்கள் கை காந்தள்மலரையும் நிகர்க்கும் என்பது பிரசித்தம். மலர் கொய்கின்ற ஒருத்தியினுடைய முகத்தை வண்டுகள் தாமரைமலரென்று மயங்கி மொய்க்கவருகின்றன. இதற்கு அஞ்சிய அவள் தன் கரங்களை முகத்தருகே மறித்து அவ்வண்டுகளை விலக்கக் கருதினாள். அக்கைகளையோ வண்டுகள் காந்தள்மலரென நினைத்து அதை மொய்க்கப் பின்னும் பாய்ந்தன. என்ன செய்வாள்பாவம். நடுங்கிப்போய் வியர்க்கலாயினாள். அவளது மெய்ம்மையையும் பேதைமையையும் வண்டின் அறியாமையையும் நளன் தமயந்திக்குக் காட்டுகின்றான்.

இந்தச் செய்யுளில் சிறியதும் சுலபமாய் அறிந்துகொள்ளக் கூடியதுமான வேரர் அணி அமைந்திருக்கின்றது. அது மயக்கவணி. மயணிக்கவணி யென்பது ஒரு பொருளை அதற்கு உவமையான மற்றொன்றே என்று எண்ணி விவகரிப்பது. தாமரைபோன்ற முகத்தையும் காந்தள்மலர்போன்ற கைகளையும் உடையவள் அம் மலர்கொய்யும் பெண் என்று சொல்வதற்குப் பதிலாய், தாமரையென்றே அவள் முகத்திலும், காந்தள் என்றே அவள் கையிலும் வண்டுகள் படிய வந்தன எனக் கூறியதில் வண்டுகள், முகத்தையும் கையையும் அவைகளுக்கு உவமைகளான பொருள்களென்று வேற்றுமைபறியாமல் மயங்கினபடியால் இங்கிது மயக்கவணி ஆயிற்று. மாதர்களுடைய கண்களைக்கண்டு வண்டுகள் அவை தமது பெண்வண்டு என்று எண்ணி அணுகும் என்று கம்பர் ஓரிடத்தில் கூறுவதும் மயக்க அணியாம். சிவபிரானது சடையிற் சேர்ந்த பிறைச்சந்திரனைப் பிள்ளையார் தன் கொம்பினின்று உடைந்த துண்டென்று எண்ணி அதைச் சடையிலிருந்து பறித்துச் சேர்த்துவைத்துப் பார்த்தார், என்று அதிவீராம பாண்டியன் விநாயக வணக்கம்பாடியசெய்யுள் இம்மயக்கஅணிக்கு அழகியஉதாரணம்.

குறிப்பு:—கொய்வாள், வேர்த்தாளை, என்பன வினையாலணையும் பெயர்கள்.

புல்லும் வரிவண்டைக் கண்டு புனமயில்போற்
செல்லு மடந்தை சிலம்பவித்து—மெல்லப்போ
யம்மலரைக் கொய்யா தருந்தளிரைக் கொய்வாளைச்
செம்மலரிற் றேனே தெளி. 5.

பதப்பிரிவு:—புல்லும் வரி வண்டை கண்டு புனம் மயில்போல் செல்லும் மடந்தை சிலம்பு அவித்து மெல்ல போய் அ மலரை கொய்யாது அரும் தளிரை கொய்வாளை செம் மலரில் தேனே தெளி.

பதவுரை.

செம் - சிவந்த
மலரில் - தாமரைமலரில் இருக்கின்ற
தேனே - தேன்போன்ற தமயந்தியே,
புல்லும் - பெண்வண்டைத் தழுவியிருக்கும்
வரி - கோடுகளமைந்த
வண்டை - ஆண் வண்டை
கண்டு - (மலரொன்றில்) கண்டு (அவைகளுக்கு அச்சமுண்டாக்கி இன்பத்தைக் கெடுக்கப்படாதென்று)
புனம் - காட்டில் திரியும்
மயில்போல் - மயிலைப்போல்
செல்லும் - ஒதுங்கிப் போகும்
மடந்தை - இந்தப் பெண்
சிலம்பு - தன் கால்சிலம்பின் ஒலியை
அவித்து - அடக்கிக்கொண்டு
மெல்ல - மெல்ல
போய் - போய்
அ - (வண்டுதழுவிய) அந்த
மலரை - மலரை
கொய்யாது - பறிக்காமல்
அரும் - இளமையாகிய
தளிரை - தளிர்களையே
கொய்வாளை - பறிக்கின்றவளை,
தெளி-நன்றுகப்பார்.

விரிவுரை:—“மலரொன்றினில் வண்டுகள் இரண்டு இன்பமாய்த்தழுவி அணைத்துக்கொண்டிருக்கக் கண்டு அவைகளுக்கு எவ்வித இடையூறும் செய்ய மனங்கொள்ளாமல் ஒருத்தி தன் கால்சிலம்புகூட ஒலிக்காதபடி மெல்லச் சென்று அம்மலரைக் கொய்யாமல் இளந்தளிர் தனக்குப் போதுமென்று பறிப்பவளைத் தமயந்தியே நீ பார்த்து அவள் எவ்வளவு மென்மையாய குணமுடையவள் என்பதைத் தெரிந்துகொள்” என்று நளன் தமயந்திக்குக் காட்டிச் சொன்னான்.

கொய்த மலரைக் கொடுங்கையி னாலணைத்து
மொய்குழலிற் சூட்டுவான் முன்வந்து—தையலாள்
பாதார விந்தத்தே சூட்டினான் பாவையிடைக்
காதார மின்மை யறிந்து.

பதப்பிரிவு:—கொய்த மலரை கொடுங்கையினால் அணைத்து மொய் குழலில் சூட்டுவான் முன்வந்து தையலாள் பாதம் அரவிந்தத்தே சூட்டினான் பாவை இடைக்கு ஆதாரம் இன்மை அறிந்து.

அந்வயம்:—(ஒருநாயகன்) கொய்த மலரைக் கொடுங்கையினால் அணைத்து (தன் நாயகியின்) மொய்குழலில் சூட்டுவான் (அவளுக்கு) முன்வந்து (பார்த்து), பாவை இடைக்கு ஆதாரம் இன்மை அறிந்து, தையலாள் பாதாரவிந்தத்தே (அம் மலரை) சூட்டினான்.

பதவுரை.

கொய்த - பறித்த
மலரை - பூக்களை
கொடுங்கையினால் - உள்ளங்கையினால்
அணைத்து - அணைத்துக்கொண்டு (ஒருநாயகன் தன் தலைவியின்)
மொய் - அடர்ந்த
குழலில் - கூந்தலில்
சூட்டுவான் - சூட்டும்பொருட்டு [போது
முன்வந்து - (அவளுக்கு) முன்வந்து (பார்த்த
பாவை - பதுமைபோன்ற அப்பெண்ணின்
இடைக்கு - இடுப்பிற்கு
ஆதாரம் - (முலைகளைச் சுமப்பதற்கே) ஆதாவு
இன்மை - இல்லாமையை
அறிந்து - தெரிந்து,
தையலாள் - அப்பெண்ணின்
பாதம் - பாதங்களாகிய
அரவிந்தத்தே - தாமரையிலேயே
சூட்டினான் - (அம்மலர்களை) சூட்டினான்.

விரிவுரை:—நாயகனும் நாயகியுமாகக் கூடிப்பொழிலிடத்தே பூப்பறித்து மகிழ்கின்ற நிகழ்ச்சிகளில் ஒன்று இது. பொழில்விளையாட்டு என்னும் பகுதியில் இதற்குமுன் சென்ற நான்கு செய்யுள்களும் மாதர்கள் தனியே மலர்கொய்வதைக் கூறின. இது காதலிருவரும் கூடிக்கொய்வதைக் கூறுகின்றது. இனிவரும் இரண்டு செய்யுள்களும் அச்சோலையின் தோற்றம் இன்னவாறு இருந்ததென்பதை வருணிப்பன.

முன்னரே முலையின்பாரத்தைத் தாங்கும்வகையில்லாது துவள்கின்றது இடை யென்னும் நினைவு இந்நாயகனுக்கு அவளெதிர்வந்ததும் பிறக்கவே இப்பூவின்பாரத்தையும் தலையில் சுமத்தினால் இடுப்பொடிந்து போம் என்பதுணர்ந்து, அதற்குப்பதிலாக மலர்களை அவள் பாதத்திற் கணிந்துவிட்டான். கடவுளைப் பூக்கொண்டு அருச்சனை புரிவோர் அவர் சிரத்திலும் தாளிலும் மலர் தூவுவது வழக்கம். தனக்கொரு தெய்வமாகிய நாயகிக்கும் இவன், தலையில்சூட்ட இயலவில்லையே என்று அயர்ந்துபோகாமல் மலரை அவள் பாதபூசைக்கு உபயோகப்படுத்தினான் என்னுமிது நகைச்சுவை உடையது.

குறிப்பு:—சூட்டுவான், வான் ஈற்று வினையெச்சம்.

ஏற்ற முலையார்க் கிளைஞ ரிடும்புலவித்
தோற்ற வமளியெனத் தோற்றுமாற்—காற்றசைப்ப
வுக்க மலரோ டுகுத்தவளை முத்தமே
யெக்கர் மணன்மே லிசைந்து. 7.

கருத்து.—மணற்குன்றுகளின்மேல், மலர்களும்முத்தும் உதிர்ந்து கிடந்ததால் அவை காதலர் ஊடியபடிக்கையைப்போல் தோன்றின.

அலர்ந்த மலர்சிந்தி யம்மலர்மேற் கொம்பு
புலர்ந்தசைந்து பூவணைமேற் புல்லிக்-கலந்தொசிந்த
புல்லென்ற கோலத்துப் பூவையரைப் போன்றதே
யல்லென்ற சோலை யழகு. 8.

கருத்து:—கலவியாற் களைத்துச் சோர்ந்த மாதர் மலர்ப்பள்ளியில் படுத்திருக்கின்ற அழகையும் போன்றது அச்சோலையினழகு.

பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா

[514-வது பக்கத் தொடர்ச்சி]

புறப்பொருள்களின் உதவியில்லாமல் ஒருவனும் தன் வாணாளைச் செலுத்தமுடியாது. மனம் தன்னந்தனியாயிருக்குமாயின், புத்திப் பெருக்கமும், பகுத்தறிவுவளர்ச்சியும், அன்பும்உண்டாகா. உலகில், ஒவ்வொருவனும் ஒவ்வோர் துறையில் தேர்ந்து பெற்றவைகளைஉபயோகித்து இனித்திருக்கும் பொருட்டே உலகாதிகள் பற்பலவாகத் தோன்றியிருந்து வருகின்றன. ஆதலால், அவைகளை நன்கு ஆராய்ந்துதனக்கேற்றவைகளைத் தெரிந்து கைக்கொண்டு வாழ்தலே விவேகத்தின் குணமாகும். குணநடத்தைகள் பொருந்தப்பெற்ற இருவர் ஒன்றுசேரின் ஊக்கமும் பலமும் தைரியமும் முன்னதைவிட இருமடங்கு அதிகரிக்குமன்றோ? இவ்வாறே மக்களனைவரும் சேர்ந்து வசிப்பார்களானால் வீரதீரர்களாகவுயர்ந்து இன்புற்றிருக்கலாமென்ற உண்மை தெளிவாகின்றதல்லவோ? இன்னமும், மனிதருக்கு உற்ற துணையாகக்கூடியவர் அவர் இனத்தினரேஎன்பதும் இதினின்றுபுலனாகின்றதன்றோ? ஆதலால், மனம் ஒருமித்து, ஒருவர்க்கொருவர் துணையாகவும் பக்கபலமாகவும் நின்று, பொதுநன்மை பயக்கக்கூடியவைகளையே துருவிப்பார்த்துக் கடைப்பிடித்து மானுடராசியின் அபிவிர்த்தியை முன்னிட்டு ஒவ்வொருவரும் தொழில்களிற் பிரவிர்த்தித்துச் செய்யவேண்டும். தனக்கானவைகளே பிறர்க்குமானவை யெனவும், தன் வழியும் பிறர்வழியும் ஒன்றெனவும் உய்த்துணர்ந்து, பகைமை வெறுப்பு பராமுகம் அசுயையாகியவைகளை அப்புறப்படுத்த வேண்டும்: ஜீவனின் தோற்றப் பரிணாமங்கள் பற்பலவாயினும், இலக்ஷியம் ஒன்றேயாதலால் அனைவரும் ஒற்றுமையுடனும் வாய்மையுடனும் பழகவேண்டும்.

ஊக்கத்துடனும் விவேகத்துடனும் ஒருவன் வாழ்க்கையின்பம் விழைந்து உழைக்கின்ற அளவுக்குத் தக்கவாறு அறவளர்ச்சியும் வாழ்க்கைச்சிறப்பும் பொலிவுற்று மேம்படும்.

உலகாதிகளை வெறுத்து, அயலார்களை விரோதித்து வருபவனுடைய வாழ்க்கை சீர்கெட்டழியும். சக்தியே அறம்எனப் பன்முறை ஸ்பைனோஸா வற்புறுத்துவதினின்று இவர் மூர்க்கத்தன்மையையும் தேகத்தடிப்பையுமே அறம் எனக்கொண்டவர் போலும் எனச் சிலர் சாதிக்கலாம். உலகவழக்கில், தேகசக்தி, மனோசக்தி, அருட்சக்தி எனப் பிரிக்கப்படுவதேயல்லாமல், உண்மையில் சக்தியானது அம்மூன்றையும் இணங்கப்பெற்று விளங்குவதாகும். இவர் உயர்த்திப் போதிப்பன, மனோவன்மையும் அருட்பெருக்கமும் அதாவது பகுத்தறிவும், தயையும், பொறுமையுமாம்.

மேலும், அவனவன் சுபாவத்திற்கு ஆனவைகளைக் கொண்டு, ஆகாதவைகளை விடுத்தல் அறவழி என இவர் புகட்டுவதினின்று, “மாந்தரனைவரும் அவ்வாறு செய்துவருவதினாற்றான் கணக்கற்ற பொல்லாங்குகள் நிலவிவருகின்றன. ஆதலால், அவ்விபரீத விநோத வழி அறநெறியாகாது, மற்று, நரகத்துட் புகுத்தும் கொடிய பாதைபோலும்,” என ஆக்ஷேபிக்கலாம். மெய்க்கருத்து யாதெனில், சர்வசக்தியும் ஞானமும் கிருபையும் நிறைந்துள்ள மூலவஸ்துவால்உலகமும் உலகாதிகளும் நிரம்பப்பெற்று இயங்குவன என்பதையும், சீருஞ் சிறப்பும் பரஸ்பர ஒற்றுமையினின்றே உண்டாகி நிலைப்பன என்பதையும் தீர்க்காலோசனை யநுபவங்களின் பலனாய பகுத்தறிவினால் அறியவே, மாநுடர்க்குப் பொதுநன்மை பயப்பனவைகளைத்தான் ஒவ்வொருவனும் பற்றிக் கிரமப்படி நடப்பான் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை என்பதாம்.

விஷயாதிகளைப்பற்றிய மங்கிச் சிறுகிக் குறுகிய உணர்வாகிய பிரேமை என்பது மேற்காட்டியுள்ள முறையால் விரிந்து ஆழ்ந்து தெளிந்தவுடன் இழிகுணம் மாறப்பெற்று அறமாக உயர்ந்து விளங்குகின்றது.

பிரேமைகளையும் ஆசாபாசங்களையும் பற்றிய அறிவே அவைகளைத் திருத்தற்கான கருவியாகும்.

பிரேமைகள் வசப்பட்டுத் தீர்ந்து தெளிந்த அறிவால் அவைகளைத்திருத்தியடக்க முடியாமல் பரிதவிக்கும் ஆன்மாவானது, உறுதியும் நன்மையும் ஊட்டுவிக்கும் ஹிதோபதேசங்களை மனப்பாடஞ் செய்து மனம் சலிக்கும்பொழுது, இடைவிடாது தியானித்து, “மாந்தர்கள் தீங்கிழைப்பதற்குக் காரணமென்னை? எக்கருத்துடன் தீமை புரிகின்றார்கள்; தீயர்களைச் சீர்ப்படுத்தற்கான உபாயங்கள் யாவை;” என்பனவாதிகளைப்பற்றிப் பன்முறை ஆராய்ந்து ஆலோசித்துப் பார்த்து வருமானால், நாள் செல்லச் செல்ல, மனக்கலக்கம் நீங்கி, மாசகரைந்து, திட்பம் [illegible] புரிதற்கான சக்தி பெறும்.

M241,N28tN
N22.5.27
199141

புகழை விரும்புபவன் அதன் நற்பலன்களையும், அதைப் பெறுதற்கான நேர்வழிகளையுந்தான் ஆராய்ந்து பார்க்கவேண்டும்; துர் உபயோகத்தினின்று உண்டாகும் தீப்பலன்களையும், துர்வழிபற்றிப் பெறுவதினால் உண்டாகும் கஷ்டநஷ்டங்களையும் கவனித்துப் புறக்கணிக்கவேண்டும். இது செய்தற் கியலாத சுயவர்கள் புகழையும் செல்வாக்கையும் தூற்றிவருகிறார்கள்.

பெயர் புகழ் செல்வாக்கு தனம் சுகஜீவனம் முதலானவைகளைப் பெரும்பாலாரும் ஞான அறவளப்பத்தினால் இகழ்வதில்லை. ஆனால், தம்முடைய எளிமையையும் மற்றவர்களுடைய சிறப்பையும் பார்த்துச் சகிக்கமுடியாமல் ஏங்கி, தம்முடைய ஏழ்மை நீங்கிப் பெருமையுற்று வாழ்வதற் கியலாத கவலையினால் தூண்டப்பட்டு, அவ்வாறு செய்கின்றனர் போலும்!

இழிய அபாயப் பிரேமை ஒன்றை, அல்லது சீறியெழுந்து வருத்தும் பிரேமையை யடக்குதற்கான உபாயம் யாதெனில், அதைவிடப் பன்மடங்கு அதிகம் பலமுள்ள வேறொரு பிரேமையினால் முன்னதை எதிர்த்துத் தடுத்தலேயாம்.

மனோவன்மையும் விரிவும் தேகாரோக்கியத்தைப் பொறுத்துள்ளன. சரீர அவயவங்களொவ்வொன்றும் அவ்வதற்கான வேலையைச் சரியாக இயற்றுதற்குப் பற்பல உண்டிகள் பிரதானமாவனபோல், மனத்தெளிவுக்கும், மெய்யறிவுக்கும், அறவாழ்க்கை உறுதிக்கும், பலதிறக் கலைப்பயிற்சிகள் இன்றியமையாதனவாகும்.

உடலூரங்குன்றினால், மனம் மழுக்கமடையும். நானாவித விஷயங்களை அறியமுடியாது, விவேகம்வளப்பமுறாது, அறச்சிந்தனை பரிணமிக்காது.

பகுத்தறிவை அநுசரித்து ஒழுகாத வாழ்க்கை அறவாழ்க்கையன்று.

தகாதவைகளையும், மேற்செல்லவிடாமல் தடுப்பவைகளையும், சகாயிக்காதவைகளையும், எவ்விதத்திலாயினும் ஒதுக்கிச் சுக ஜீவனத்திற்கும் புத்திப்பெருக்கத்திற்குமானவைகளைத் தேடிப் பெற்றுக் கிரமப்படி உபயோகித்துவரவேண்டும்.

குன்றுடையானும் மக்களும்

இரண்டாம் புத்தகம் — 4. பன்றிப்போர்

[507-வது பக்கத் தொடர்ச்சி]

வேடுவர் சீமையிலே பத்துவருடங்கள் மழையில்லாமையால் பெரும் பஞ்சம் தோன்றிற்று. பூமி வறண்டது; பயிர்பச்சைகள் கருகிப்போயின; மனிதர்களும் கால்நடைகளும் உண்பதற்குணவும் குடிக்கத் தண்ணீரு மின்றித் தவித்தனர்.

தாமரைநாச்சி வளர்த்த மலட்டுப்பன்றி தலையூரை நாடிச்சென்று வீரதங்காளை யடைந்து அடைக்கலம் புகுந்ததென்று முன்னரே கூறப்பட்டிருக்கின்றது. அப்பன்றி அவளையண்டிக் கொழுக்கத் தின்று, மதுக்கரைக்காளியம்மன் வரத்தாற் சினையுற்று, உரிய காலத்திலேஓர் ஆண்குட்டியையீன்று உயிர் துறந்தது: உதிக்கையிலேயே பெரிய பன்றியினளவாய்ப் பிறந்த அக்குட்டி, வீரதங்காள் போற்றிவளர்க்கநாளடைவில், பார்த்தோர் சிற்றானையே என்று சொல்லும்வண்ணம் பருத்து வளர்ந்தது.

அது சங்குவெள்ளைக் கொம்பன்: ஒவ்வொருகொம்பும் ஐந்தடி நீண்டிருக்கும். அதற்கு வெந்த நிறச் சிங்கமுகமும் சித்திரப்பூ வாலும் நெற்றியிலே சுட்டியும் உண்டு. அதன் கால்கள் வெள்ளை, வீரதண்டை யணிந்தவை. அது வம்புசெய்த பேரை வாரியடிக்கும். அது உருமினால் மலையிற் சிலையெழும்பும். அத்தகைய பன்றியை அதுவரையில் ஒருவரும் கண்டதில்லை.

பஞ்சத்தாற் போதியஇரை கிடைக்காமையால் கோரைக்கிழங்கையும் சாரணைக்கிழங்கையும் தோண்டித் தோண்டித்தேய்ந்துபோன கொம்புகளையுடைய அப்பன்றி, ஒற்றைப்பனைமரம் நின்ற தனது குடிசை வாசலில் முன்னங்கால்களை நீட்டிப்படுத்து, முகத்தை யக்கால்களின்மேற் கிடத்தி, பசியால் மெலிந்து குழிவிழித்துக் கண்களை மூடும், மூடவே, பசிய புன்னிலங்களும் செந்நெல் வயல்களும் வாழைத் தோட்டங்களும் [illegible] தோன்றி, அது அரைத்தூக்கமாய்க் கண்[illegible]றக்கையில் மீண்டும் மறையும். அத்தகைய நிலங்களும் வயல்களும் தோட்டங்களும் வேடுவர்சீமைக்கு அப்பால் உள்ளனவென்று அப்பன்றி எண்ணி, அவ்விடங்களுக்குச் சென்று வயிறாரத் தீனிதின்ன விரும்பி, எழுந்திருந்து, உர் உர் என உருமிச் சிலையெழுப்பி, குளம்பு பட்ட இடத்தில் புழுதியெழும்ப வாலை முறுக்கி, தலையைத் தொங்கவிட்டுக் குறுகுறு நடந்து, வேடுவர்சீமையைக் கடந்து சோழரெல்லையில், உய்யக்கொண்டான் நாட்டிற் புகுந்து ஒரு காரிண்டன் புதரில் படுத்துறங்கிற்று.

இரவு பதினைந்து நாழிகைக்குப் பன்றி விழித்தெழுந்து அண்மையிலிருந்த நெல்வயல்களிலே இறங்கிற்று. அவ்வயல்கள் சோழமன்னருக்குரியவை. ஆண்டிருந்த பயிர்களை வேரோடு பிடுங்கி, செந்நெல்லையெல்லாம் வெண்பாலொழுகத் தின்று, வயல்களை மிதித்துச் சேறுழுது, சூரியனுதிக்குமுன் வீரமலைக் காட்டை யடைந்து, அங்கே படுத்துத் தூங்கிற்று.

மறுநாட் காலையில் காவற்காரக் கருப்பக்குடும்பன் வயல்பார்க்கச் சென்று, நெல்லைக்காணாது வயல் எல்லாம் சேறாயிருத்தலைக் கண்டு, 'ஐயோ! நெல் இல்லை, புல் இல்லை, சேறுதான் உண்டு' என்று சொல்லி அங்குமிங்கும் ஓடிப்பார்த்து, வரப்பிலும் சேற்றிலும் உரற் சுவடு கண்டு, தலைதலையாய் அடித்துக்கொண்டு சோழமன்னரிடம் ஓடி முறையிட்டான்.

சோழமன்னர், 'என்னடா, கருப்பா, வயல் எவ்வாறழிந்தது? கொள்ளைபோயிற்று, குளமழிந்ததா?' என்றார்.

கருப்பக்குடும்பன், 'ஆண்டவரே, கொள்ளையும் போகவில்லை, குளமும்உடையவில்லை. தேடிப்பார்க்கையில் உரற்சுவடு கண்டேன்' என்று விடைகூறினான்.

சோழமன்னர், 'என்னடா, உரற் சுவடு என்கிறாய். நீ சொல்வது விந்தையாயிருக்கிறது! எங்கேனும்உரல் நடப்பதுண்டா?' என வினவினார்.

கருப்பக்குடும்பன், 'ஆண்டவரே, உரல் நடப்பதை நான் இதுவரையிலும் பார்த்ததில்லை. ஆயினும் எனக்கு இப்பொழுது உரலின்மேல் கொஞ்சம் சந்தேகம் உண்டாயிருக்கிறது. நான் வயலுக்குப்போய் அக்கம் பக்கத்திலிருக்கிற பள்ளரையெல்லாம் தத்தம் உரலைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளச் சொல்லுகிறேன்' என்று பணிந்து சொன்னான்.

சோழமன்னர் நகைத்து, 'நல்லது. நீ போய் இன்னும் இரண்டுநாள் காவலிருந்து வயலையழிப்பவர் யாவரென்று கண்டு வந்து சொல்லவேண்டும், அன்றேல், உனக்குத் தகுந்த தண்டனைகிடைக்கும்,'' என்று அச்சுறுத்தி யவனை அனுப்பினார்.

கருப்பக்குடும்பன், தண்டனைக்குப் பயந்து, இன்னது செய்வதென் றறியாது மதிமருண்டு, மீண்டும் வயலுக்குச் சென்று, அங்குப் பள்ளர் சேரிகளிலுள்ள உரல்களையெல்லாம் கயிற்றாற் கட்டிப்போட்டுக் காவலிருந்தான்.

அன்றிரவும் பன்றிவந்து மீந்த வயல்களையும் பக்கத்திலுள்ள நந்தனவனங்களையும் விளைதோட்டங்களையும் அழித்துவிட்டு வீரமலைக் காட்டுக்குப் போயிற்று.

மறுநாட்காலையில் கருப்பக்குடும்பனும் மற்றுஞ்சில பள்ளரும் வந்து, அழிந்த வயல்களையும் தோட்டங்களையும் பார்த்து, அங்கே பன்றியின் காற்சுவடுகள் கண்ணிற்பட, 'ஐயே! இவை உரற் சுவடுபோலிருக்கின்றனவே! கட்டிப்போட்ட உரல்கள் அசையாமல் சேரிகளிலேயே கிடக்கின்றனவே! என்னசெய்வோம்?' என்று ஏங்கி, அச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்றனர். அச்சுவடுகள்மேடுகளிலேறியும் பள்ளங்களிலிறங்கியும் நெடுந்தூரம்சென்று வீரமலைக்காட்டையடைந்தன. பள்ளர்கள் விடாது தேடிச் சென்று காரிண்டன் புதரிலே பன்றியைக் கண்டு, கைகால் நடுங்க, வாய் குளற விழுந்தோடிச் சென்று, சோழமன்னரிடம்தாம் கண்டவற்றைச் சொன்னார்கள்.

சோழமன்னர் உண்மையை விசாரித்தறிந்து, அண்ணன்மாரை யழைத்துவரும்படி நால்வர் தூதுவரைச் சிற்றூலைப்பட்டணத்துக்கு அனுப்பினர்.

அண்ணன்மார் தங்காள்பால் விடைபெற்று, மேழிக்கொடியும் வெண்குடையும் குதிரைவீரரும் புடை சூழச் சென்று உறையூரை அடைந்தனர். சோழமன்னர் அண்ணன்மாரை எதிர்கொண்டழைத்துச் சென்று, விருந்து செய்வித்து, சந்தன தாம்பூல மளித்து, மந்திரி சேனைத்தலைவர் முதலான பெரியோர் கூடியிருந்த கொலுமண்டபத்துக்கு அழைத்துப் போய் ஆசனமளித்தனர். அண்ணன்மார் எழுந்து நின்று, சோழமன்னரை நோக்கி, 'எங்களை யழைப்பித்த காரியம் யாது?' என்றனர்.

அதுகேட்டுச் சோழர், 'வேடுவர் கொள்ளை கொண்ட பொருளை நீங்கள் திருப்பியதைப் பச்சையண்ணா முதலியும் பிறருஞ்சொல்லக்கேட்டு மகிழ்ச்சியுற்றோம். நாம் ஒருவர்க்கொருவர் உற்ற துணையாயிருத்தல் வேண்டும்என்று நினைத்து உங்களை இங்குஅழைப்பித்தோம். உங்களுடைய வீரச் செயல்களைக் கேட்டு மெச்சி உங்களுக்குப் பாதிகாவல் கொடுக்க விரும்பினோம். இதோ பட்டயம் பெற்றுக்கொள்ளுங்கள்' என்று சொல்லிப் பட்டயங்கொடுத்தார். அதனில், 'காவலுக்குத் தெற்காகக் கடற்கரைக்கு நேர் வடக்காய், வல்லத்தின் மேற்காக மதுக்கரைக்கு நேர்கிழக்கு, எல்லையற்ற நாடுகள் பொன்னியிருகரையும் பாதிகாவல்' என்றெழுதிச் சோழ மன்னர் முத்திரையு மிட்டிருந்தது.

அண்ணன்மார் பட்டயத்தைப் பெற்றுக்கொண்டு மன்னருக்குச் செய்யவேண்டிய வந்தனை வழிபாடுகளைச் செய்து தத்தம் ஆசனத்தில் அமர்ந்தனர்.

மன்னர் புன்னகை புரிந்து, [illegible], 'அண்ணன்மாரே, உங்களை இங்கே அழைப்பித்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு; அதைச் சொல்லுகிறேன் கேளுங்கள்:—

"கடந்த நாலைந்து நாட்களாய் ஒரு பன்றி நமதுநாட்டில் நுழைந்து படுத்தாத பாடு படுத்துகிறது; அதனை கட்டழகும் பாவனையும் கண்டதில்லை யிதுவரையும். அது சங்கு வெள்ளைக் கொம்பன். அதற்குச் சிங்கமுகம், சித்திரப்பூ வால், நெற்றியிற் சுட்டி, நான்கு கால்களிலும் வீரதண்டை. அது, சிற்றானைப் பருமனது; கட்டுக் கடங்காமல் கொட்டமிடுகிறது; வம்புசெய்தபேரை வாரியடிக்கும்; உய்யக்கொண்டான் நாட்டிலுள்ள நந்தனவனங்களையும் தோட்டங்களையுமழித்து, நெல்வயல்களை மிதித்துப்பாழாக்கியுழப்பி, செந்நெல்லை யெல்லாம் வெண்பாலொழுகத் தின்று விடியுமுன் வீரமலைக் காட்டையடைந்து படுத்துறங்கும். அதனால் உழவுநடவில்லை, உபத்திரவங்க ளநேகம். அதை யெதிர்த்துப் போராடுவோர் இங்கே ஒருவருமில்லை; அதை அடக்கத் தெய்வவரத்தாற் பிறந்த உங்களால் இயலும். அதைக் குத்திக் கொன்றால் மெச்சிக்கொள்வோம்' என்றார்.

அண்ணன்மார் மன்னரிட்ட பணியை மூன்று நாளில் முடிப்பதாக வாக்களித்து, பாக்கியையும் வெகுமதியும் பெற்று மன்னர் பரிசளித்த தந்தப் பல்லக்கில் ஏறி வளநாடு சேர்ந்தனர்.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[511-வது பக்கத் தொடர்ச்சி]

(i) திரவியம்

அறுவகை அருத்தங்களில் முதலாவதான திரவியம் ஒன்பது வகைப்படும். திரவியம் சமவாயி காரணமாயும் குணாசிரயமாயு முள்ளது. அவற்றின் வகைகள் (1) பிருதிவி (2) அப்பு (3) தேயு (4) வாயு (5) ஆகாயம் (6) காலம் (7) திக்கு (8) ஆன்மா (9)மனம் என்

திரவியத்திற்கு இலக்கணம் குணத்தைப் பற்றுக்கோடாயிருத்தல்-இது சிலவற்றில் மிக்க வெளிப்படையிலும் சிலவற்றில் மறைந்துமிருக்கும். திரவியமே (சமவாயி காரணம் அல்லது) முதற்காரணமாயிருத்தலால், எக்குணத்தைக் கூறினும், திரவிய சம்பந்தத்துடனே கூறவேண்டுமன்றித் தனியே கூற ஏலாது. நிர்குணியாவன் பரமனொருவனன்று. வேறு பொருள் கூறில்,

மேற்கண்ட திரவியங்களில் காலம் திக்கு என்னும் இரண்டும் சர்வகாரியங்களுக்கும் நிமித்தகாரணமென்று கருதப்படுமாயினும், அவை தம்மிடத்துள்ள சையோக முதலியவற்றிற்குச் சமவாயிகாரணமாயிருத்தலறிக. பிரதிவி முதலிய நான்கும், பரமாணுக்களாய் விளங்குங்காலை நிரவயவம் உடையன வென்றும், ஏனையகாலை அவயவத்துடன் கூடியவை (சாவயவம்) என்றும் இரண்டு பிரிவுகளாய் எண்ணப்படும். ஆகாயம் முதலிய நான்கும் விபுரூபங்களென்றும் (Pervading all space) மனம் அணுரூபமென்றும் கொள்ளப்படும். பரமாணுக்களும், துவியணுக்கங்களும், வாயு, ஆகாயம், காலம், திக்கு, மனம் என்பனவும் அப்பிரத்தியக்ஷங்களெனப்படும். ஆன்மா மானதப்பிரத்தியட்ச மென்பர். மகத்துவ உற்பூத உருவமுடைய பிரதிவி, அப்பு, தேயு என்னும் முப்பூதமும் புறவிந்திரியப் பிரத்தியட்சமாகும்.

ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, பரமாணுக்கள், மனம் என்பன யாதொன்றன்கண்ணும் சமவாய சம்பந்தத்தா லிருத்தலில்லையென்றும்; பிரதிவி அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்தினிடத்திலும் பூதத்தன்மையுள்ளதென்றும், ஆகாயம் நீங்கலான ஏனைய பூதங்கள் மனத்தினிடத்து மூர்த்தத்தன்மையும், கிரியையுமுள்ளனவென்றும், அவை நான்கும் திரவிய சமவாயிகாரணங்களென்றும், காலமுந்திக்கும் சர்வகாரியங்களுக்கு நிமித்தகாரணமென்றும் தர்க்க நூல் கூறும். பூதத்தன்மையாவது வெளியிந்திரியத்திற்குப் புலப்பட்டுப் பின்னர் அவற்றால் கிரகிக்கக்கூடிய தன்மையான ஒருவகைச் சிறப்புக்குணம். மூர்த்தத்தன்மையாவது கிரியையின் சமவாயி காரணத்தால் வரைந்துகொள்வதால் சித்திக்கும் ஜாதிவிசேடம். இனி, திரவியங்களின் தன்மையை முறையே காண்போம்.

(i) பிரதிவி—மண். இது, வன்மை மென்மை முதலிய அவயவசையோக *விசேடத்தோடு கூடியது. கிராணம், உடம்பு, மட்பிண்டம், கல், மரம் முதலிய உருவமுடையது. கந்தம், ரூபம், ரசம், பரிசம், சங்கியை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விவாகம், அண்மை, சேய்மை, குருத்துவம், திரவத்துவம், சம்ஸ்காரமென்னும் பதினைந்து குணங்களுடையதாகும். மற்றும் பிரதிவி, ‡நித்திய அநித்திய பேதத்தால் இருவகைப்படும். பரமாணுரூபம் நித்தியம், காரியரூபம் அநித்தியம்.

பிரதிவிக்கு இலக்கணம் பிரதிவித்தன்மையுடையதென்று தர்க்கசங்கிரகம்முதலிய நூல்கள் கூறும். அவ்வாறு இலக்கணம் விளம்பல் கேட்போருக்கு யாதொரு அறிவும் ஊட்டாது. மனிதத்துவம் உடையவன் மனிதன், மாட்டுத்துவமுடையது மாடு என்பதுபயனிலுரையாகும். இலக்கணமானது ஒரு பொருளை, அதற்குச் சம்பந்தமான ஏனைய பொருள்களினின்றும் எடுத்துக் காட்டவேண்டும் (per genus et differentia). அங்ஙனம் கூறுவிடின், விளக்கமாகாமையும், அவ்வாறு கூறுவதில் காட்டக்கூடியன முற்றும் காட்டப்படாதுவிடப்படுவதும் இன்றிமையாப் பயனுகுமாயினும், பின்னதே மேலான வகையென மேல்நாட்டுத் தர்க்கநூலார் ஆமோதிப்பர். அவ்வகையில் பிரிதிவி கந்தமுடையதென்னலாம் காற்றில் வரும் நல்லவாசனையும் நீர் எண்ணெய் சாராயம் முதலியவற்றின் வழி வரும் கந்தமும், ஸ்தூல ரூபமாய்ப் பிரிதிவி உருவத்துடன் காணப்படாவிடினும், நாசியைத் தாக்கும் வாசனை அணுக்கள் பிரிதிவியின் தன்மை யுடையனவே யாகும். நெருப்பு, நீர், காற்று இவற்றிற்கு வாசனையுண்டெனின் அவற்றுடன் கந்தம் தரும் பிரிதிவியின் அணுக்கள் சம்பந்தப்பட்டாலன்றி, வாசனையறியலாகாது. மற்றும் நமதுநாட்டுத் தர்க்கமுறையில் பிரிதிவி, அப்பு, தேயு, வாயு வெனப்பிரித்தது குணத்தைக் கொண்டன்றி உருவத்தைக்கொண்டு வகுக்கவில்லை. பனிக்கட்டி (Solid) உறைந்திருப்பினும் அது பிரிதிவியாகாது. நீராவி, காற்றுமயமாயிருப்பினும் அப்புவேயாம். நெருப்பின் சம்பந்தத்தால் உலகத்தில் வெளிவரும் பொருள்கள்யாவும்தீயின் பகுதியென்பர் (உ-ம்) பொன், வெள்ளிமுதலிய (உலோகங்கள்). எனவே கந்தமுடையது பிரிதிவியாகும். கந்தமற்றது, ஏனைய பூதத்தின் பகுதியாம்.

(2) அப்பு :—நீர். இதற்குச் சரீரம் ஆறு, கடல், பனி முதலியன. அப்பு குளிர்ந்த பரிசமுடையது * இது ரசந இந்திரியப்புலனு லறியக்கூடியதாம். இதற்குக்கந்தமில்லை. மற்ற குணங்களுண்டு. இதுவும் நித்தம் அநித்தம் என்னும் பகுதிகளையுடையது. பரமாணுரூபம் நித்தம். காரியரூபங்கள் அநித்தம். காரிய ரூபங்கள் சரீர இந்திரிய விடய வேறுபாட்டால் மூவகையாம். சரீரம், வருணமண்டலத்துள்ளது. இந்திரியம் சிங்குவை (ரசனை), விடயம், நதி, கடல் முதலியன. புனலின் சிறப்பை-அப்பர்பாடிய திருவதிகை வீரட்டானம். காப்புத் திருத்தாண்டகப் பதிகம் முற்றிலுங் காணலாம்.

அப்பின்கண் அலை சுழி ஓட்டம் முதலியன சிறந்த குணங்களாம். இவற்றை அப்பர் † "நில்லாத நீர் சடைமேல் நிற்பித்தானை" என்று நீரை உருவகப்படுத்தி நமது வாழ்வினைப் அடியிற் கண்டவாறு வர்ணிப்பது காண்க:—

* நிலந்தரத்து நீண்டுருவ மான நாளோ
நிற்பனவும் நடப்பனவும் நீயே யாகிக்
கலந்துரைக்கக் கற்பகமாய் நின்ற நாளோ
காரணத்தால் நாரணனைக் கற்பித்தன்று
வலஞ்சுருக்கி வல்லசுரர் மாண்டு வீழ
வாசுகியை வாய்மடுத்து வானோ ருய்யச்
சலந்தரனைக் கொல்வதற்கு முன்னோ பின்னோ
தண்ணாரூர் கோயிலாக் கொண்ட நாளே.
—திருவாரூர் திருத்தாண்டகம் 7.

‡ நித்தியமாவது (முன்னின்மை பின்னின்மைகட்கு எதிர்மறை) உற்பத்தி நாசம் இன்மை.

* நீரைச் செஞ்சடை வைத்த நிமலனூர்
காரொத் தமிடற் றர்கனல் வாயரா
ஆரத் தருறை யும்பணி யாரூரைத்
தூரத் தேதொழு வார்வினை தூளியே.
திருவாரூர் - திருக்குறுந்தொகை - 9.

† நீர்த்திரளை நீள்சடைமேல் நிறைவித் தானை
நிலமருவி நீரோடக் கண்டான் றன்னைப்
பாற்றிரளைப் பயின்றாட வல்லான் றன்னைப்
பகைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தான் றன்னைக்
காற்றிரனாய் மேகத்தி னுள்ளே நின்று
கடுங்குரலா யிடிப்பானைக் கண்ணோர் நெற்றித்
தீத்திரளைத் தென்கூடல் திருவால வாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னனே.
—திருவாலவாய்த் திருத்தாண்டகம் 8.

அலையார் வினைத்திறஞ்சே ராக்கை யுள்ளே
யகப்பட்டு ளாசையெனும் பாசந் தன்னுள்
தலையாய்க் கடையாகும் வாழ்வி லாழ்ந்து
தளர்ந்துமிக நெஞ்சமே யஞ்ச வேண்டா
இலையார் புனற்கொன்றை யெறிநீர்த்திங்கள் [த்த
இருஞ்சடைமேல் வைத்துந்தான் இமையோரே
நிலையா னுறைநிறை நெய்த்தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.
—திருநெய்த்தானம்-திருத்தாண்டகம். 4.

(iii) தேயு—தேயுவென்பது ஒளியின் சம்பந்தத்தால் மலிவது. கண்ணாகிய இந்திரியத்திற்குப் புலப்படுவது. தேயு உஷ்ணமெனினும், ஒளியே அதன் சிறப்பான குணமாகும்.

எரியலா லுருவ மில்லை யேறலா லேறு மில்லை
கரியலாற் போர்வையில்லை காண்டகு சோதிபார்க்கும்
பிரிவிலாவமரர் கூடிப் பெருந்தகைப் பிரானென்றேத்
அரியலாற் றேவி யில்லை யையனை யாறனார்க்கே.[தும்
—திருவையாறு - திருநேரிசை 5.

ரூபம், பரிசம், சங்கியை, பரிமாணம், வேற்றுமை சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம் திரபத்துவம் சம்ஸ்கார மென்னும் பதினொரு குணங்களையுடையது தீயாகும். அவற்றுள் பரிசம் நால்வகை.

(1) உற்பூத ரூபப்பரிசம்:—இப்பரிசம் சூரியனது தேசஸிலும், மின்னலிலும், தீயிலும் காணலாம். இது இருவகை; சாதாரண உற்பூத ரூபபரிசம் என்றும் அசாதாரண உற்பூத ரூபபரிச மென்றும் கொள்ளலாம். முன்னது உஷ்ணத்தைத் தட்சணம் தருவது (Conduction of heat). பின்னது (after-effect or product of heat) உஷ்ணத்தால் வெளிப்பாடானதாய் உஷ்ணம் தொக்கியிருப்பதுவாம். உதாரணம், பொன்; இதை உற்பூத (வெளிப்படுதல்) அபிபூத (மறைப்பட்ட) ரூபபரிசமெனத் தர்க்க நூல் கூறும்.

(2) அநுற்பூத ரூப பரிசம் என்பது, கண்ணுக்குப் புலப்படாததும் பரிசத்தால்கிரஹிக்கப் படாததுமாம். உதாரணம் கண்ணைத்தாக்கிய ஒளி அவ்விந்திரியமார்க்கம் செல்லல்.

(3) அநுற்பூத ரூப உற்பூதபரிசம்-வெந்நீரில் உஷ்ணம் (Convection)

(4) உற்பூதரூப அநுற்பூத பரிசம்-அதாவது உஷ்ணம் ஒன்றினின்று மற்றொரு பொருளுக்குப் பாய்வது. (Radiation) விளக்கின் ஒளி, மண்டலம் முதலியன.

தேயுவின் இலக்கணம் சுடும்பரிசமுடைய தென்பர். இதுவே சாமான்ய தேயுத்தன்மை. காரிய வடிவமான தேயு, சரீர இந்திரிய விடய வேறுபாட்டால் மூவகைப்படும். சரீரம் ஞாயிறு (சூரியலோகத்திலுள்ளது); இந்திரியம் சட்சுவிடயம் நால்வகை. அவையாவன :— மண்ணிலுள்ளது, விண்ணிலுள்ளது, வயிற்றிலுள்ளது சுரங்கம் முதலியவற்றிலுள்ளது என்பன. பிரிதிவியின் காரியமான கட்டையில் தீ பௌமம் அல்லது மண்ணிலுள்ளதென்பர். விண்ணிலுள்ளது திவ்வியமெனப்படும். அது நீர்ச்சம்பந்தத்தால் விளங்குவது-மின்னல், வடவனல் முதலியன. உண்டவுணவு பரிமைத்தற்கேதுவாய ஜடராக்கினி ஔதரியமெனப்படும். சுரங்கம் முதலியவற்றிலுள்ள பொன் வெள்ளி நவரத்தினங்கள் முதலியன ஆகரஜமெனப்படும். இவை பிரிதிவியின் உருவமும் பரிசமும் பொதிந்து பிரகாச உருவத்தையும் சுடும் பரிசத்தையும் தடுத்தலால், அவை புலப்படாதிருக்கின்றன வென்பர். இந்நாற்பகுதிகளைக் குறிப்பது போல் அப்பரும்,

விண்ணிடை மின்னொப் பானை
மெய்ப்பெரும் பொருளொப் பானைக்
கண்ணிடை மணியொப் பானைக்
கடுவிருட் சுடரொப் பானை
எண்ணிடை யெண்ண லாகா
விருவரை வெருவ நீண்ட
அண்ணலை நினைந்த நெஞ்சம்
அழகிதா நினைந்த வாறே.
—நினைந்த திருநேரிசை 9.

எனப் பரமனைப் போற்றுவார்.

—§—

எல்லாம் வீணே?

ஒரு சிறு ஈரங்க நாடகம்

[510-வது பக்கத் தொடர்ச்சி]

இரண்டாம் களம்.

இடம்:—மதுரையில் ஒரு வீடு. காலம்:—நண்பகல். கோதண்டராமஐயர் கையில் வர்த்தமான பத்திரிகை வைத்துக்கொண்டு சாய்வுநாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார். மீனாக்ஷியம்மாள் 'ஸோப்' துவாலை முதலிய ஸ்நானத்திற்கு வேண்டியவைகளை எடுத்துக்கொண்டு வருகிறாள்.

மீனாக்ஷி :—ஏன், ஸ்நாநம் பண்ண வாருங்களேன்!

[கோதண்டராமஐயர் பத்திரிகையை நன்றாய் மடித்துக் கையில் எடுத்துக்கொண்டு எழுந்து உலாவுகிறார்.]

கோதண்:—என்ன இருக்கிறது இந்தப்பேப்பரில். என்னமோ! 'அதெஇதெ'ப் பண்ணி-அரைக்காசிற்குப் பிரயோஜனமில்லை. "கலகம்", அதுதான் ஒன்று இருக்கின்றதே! அதுபோனால் "இந்தியாவில் அமினி ஏற்றுமதி,!—வெள்ளைக்காரன் பங்கா இழுக்கிறவனை உதைத்துக்கொன்று தள்ளுவது—தப்பினால் மோடார்காரும் ஜட்காவண்டியும் முட்டிக்கொள்வது. எலக்ஷன்—எலக்ஷன்—மகாநாடு—நாய்க்குட்டி மகாநாடு, கத்தைக்கூண்டு மகாநாடு! என்ன இகபர சாம்பிராச்சியம் இந்தப் பேபரைப் படித்து. எத்தையானால் 'அதெஇதெ' எழுதினாலும் என்னவானால் தேவலை என்னலாம்.

மீனாக்ஷி:—சரி—உங்களுக்கு மனதில் விசாரம். எதன் தலையிலாவது பொங்கித்தின்றுகொண்டே இருக்கிறீர்கள். இப்பொழுது பாவம் பேபரின் தலையில் விடிந்ததாக்கும். ஜலம் தயாராய்விட்டது, குளிக்கப்

போங்கள்-அப்புறம் 'இதேஅதே அதேஇதே' மாற் மாற்றி எல்லாப் பேபரிலும் எழுதச்சொல்லலாம்-குளிக்க எழுந்திருங்கள் இப்பொழுது.

கோதண்:—ரொம்ப புத்திசாலி; உனக்கு எப்பொழுது பார்த்தாலும் என்னைக் கேலி காட்டுவதுதானே வேலை.

(சீனுவாசமூர்த்தி வருகிறான்.)

சீனு:—ஏனம்மா, எனக்கெதாவது தபால் வந்ததோ?

கோதண்:—என்ன தபால் எதிர்பார்க்கிறாய்? இந்தச் சனியன் தபாலொன்று. தபால்காரனோ, தபால்காரனோ என்று தவிப்பதுதான் குறை. வந்த தபாலை உடைத்துப் பார்த்து வாஸ்தவமாக'துபண்ணினவன்' யார் சொல்! கடிதம் வந்தால் எதற்கு வரப்போகிறது.விருந்துவிருந்தாய்க் கொண்டுவந்துவிடும். கடன் கேட்கவோ அல்லது கடனைக் கேட்கவோ போகிறார்கள். நமக்குக் கொடுக்கவேண்டியதைக் கேட்டு எழுதி இருந்தோமானால் 'இப்பொழுது சவுகரியமில்லை நடவடிக்கை நடத்திக் கொள்ளலாம்' என்று பதில் வரும். இவைகளெல்லாம் இல்லாமற்போனால், சாவு—இழவுதான், கலியாணமா—போகவரச் செலவிற்கு என்ன செய்வது; இரண்டும் ஹிம்ஸைதான். எல்லாம் ஒழிந்தால், அந்தச் சட்டசபைக்கு நிற்கிறேன், அல்லது "நான் இந்தச் சட்டசபைக்கு நிற்கிறேன், ஐயா தயவுசெய்து உங்கள் ஓட்டை எனக்கே கொடுங்கள்—" ஆபீஸ் லெடரா? சள்ளை அரைக்காசிற்குப் பிரயோஜனமில்லை. இத்தனைத் தபாலாபீஸ் இருந்தும் என்ன பிரயோஜனம்-என்னமோ 'அதேஇதேப் பண்ணாமல்......

மீனாக்ஷி:—போதும். ஓயமாட்டேன் என்கிறீர்களே. ஸ்நாநம் பண்ணப்போங்கள். உங்கள் வாய்க்குத்தான் எதாவது அவல் அகப்பட்டுக்கொண்டே இருக்கிறதே. முன்னே வர்த்தமானப் பத்திரிகையைப் பிடித்துக்கொண்டீர்கள். இப்பொழுது தபாலாபீஸாக்கும். இவர் பெண்ணிற்குக் கலியாணம் ஆகவில்லையாம்-அதற்காகத் தபாலாபீஸெல்லாம் அரைக் காசிற்குப் பிரயோஜனமில்லை என்றுவிடுகிறாரே. சாப்பாடு ஆனால் சரியாய்ப் போய்விடும், வாருங்கள்.

சீனு:—அப்பா, குளிக்கப் போங்களேன். சாப்பிடுவோம்.

கோதண்:—ஏன் இப்படி என்பிராணனைத் தாயும் பிள்ளையுமாகச் சேர்ந்து வாங்குகிறீர்கள். வெங்கடேசா! வெங்கடேசா...

[வெங்கடேசன் வருகிறான்.]

ஏண்டா 'இதேல்லாம் 'இது' பண்ணிவிட்டாயாடா?.....என்னடா விழிக்கிறாயே!

மீனாக்ஷி:—'இதேல்லாம் இது பண்ணிவிட்டாயா' என்றால் அவன் என்ன பதில் சொல்வான்பாவம். இன்றைக்குத்தானே வேலையில் வந்து அமர்ந்திருக்கிறான்.

கோதண்:—(முகத்தைச் சுளித்துக்கொண்டு) இதைப் பார் மீனாக்ஷி. எப்பொழுது பார்த்தாலும் என்னை இப்படி'இது'பண்ணிக்கொண்டிருக்காதீர்கள்.உங்களுக்கென்ன வேதனையா, விசாரமா? உங்களுக்கென்ன! கடைசியில் 'து பண்ணுகிறதெல்லாம் நான். இப்படி எல்லாம் 'இது'பண்ணிக்கொண்டிருந்தால் ஆகிறதில்லை.

மீனாக்ஷி:—சரி, பேபராச்சு, தபாலாச்சு; இப்பொழுது எனக்கே வைத்தீர்களா; குளிக்கப்போங்கள். பசிவேளை. உங்கள் இஷ்டப்பிரகாரம் நான் இனிமேல் 'இது' பண்ணவே இல்லை, போங்கள்.

(கோதண்டராம ஐயர் போகிறார்.)

சீனு:—ஏனம்மா, அப்பா இத்தனை 'கடுகடு' வென்றிருக்கிறார்.

மீனாக்ஷி:—எல்லாம் உன்னால்தான். வேறென்ன!

சீனு:—தெரியுமே! அப்பா எல்லார் தலையிலும் பொங்கித் தின்பது. நீ எப்பொழுது பார்த்தாலும் என் தலையில் பொங்கித் தின்பது. நானென்ன பண்ணினேன்?

மீனாக்ஷி:—கலியாணம் பண்ணிக்கொள்ளச் சொன்னால் இப்படி ஹடம்பிடிக்கிறாயே. என்னடாதிது! என்னதானிருந்தாலும் இத்தனை கர்வம் கூடாது. யார்தான் பெண்ணைக் கொடுக்கிறேன் என்று சொல்லிவரட்டுமே அவர்களுக்கு ஒருகுறை சொல்லி அனுப்பிவிடுகிறாய். உனக்காகத்தான் இல்லாமற் போனாலும் விசாலத்திற்காகவாவதுவேண்டாமோ?

சீனு:—அவளுக்கே இன்னும் கலியாணமாகவில்லையாம். எனக்கென்ன அவசரம் வந்துவிட்டது? பெண்ணுக்கல்லவோ முதலில் கலியாணம் பண்ணுகிற வழியைத் தேடுவார்கள்.

மீனாக்ஷி:—உனக்கு ஆகாமல் அவளுக்கு என்ன வழியைத்தேடுவது! பணம் வேண்டாமோ! உங்கப்பா 'முனிசீப்' பண்ணின பெருமை ஒன்றுதான்.பென்ஷன் தவிர வேறொன்றிற்கும் ஐவேஜி இல்லை! நீதான் எதோ லாகாலேஜில் படிக்கிறேன் என்று பேர் வைத்துக்கொண்டிருக்கிறாயே. ஆஸ்திதான் இல்லாமற்போனாலும் முனிசீப்புபிள்ளை என்கிறதாவது இருக்கிறதே. உனக்கு யாராவது நாலாயிரம் ஐயாயிரம் ரூபாய் கையில் கொடுப்பார்கள். அதை வாங்கித்தானே விசாலத்திற்கு வழி திறக்க வேண்டும்.

சீனு:—ஆனால், என் படிப்பெல்லாம் வெறும் கலியாணப் படிப்பென்று சொல்! ஓகோ! இப்படியாயிருக்கிறது விஷயம். இத்தனை நாளாய்த் தெரியாமற் போயிற்றே!

மீனாக்ஷி:—சரி, தெரிந்ததே. இனிமேலாவது சமத்தாய்ச் சொல்வதைக் கேள். தெரியுமா?

சீனு:—நான் என்னம்மா இதுவரையிலும் கேட்கவில்லை?

மீனாக்ஷி:—ஆமாம். சுப்புசாமிஐயர் போனவருஷம் கலப்பணத்துடன் தன் பெண்ணைக் கொடுக்கிறேன் என்று வந்தார். அவருக்கு முன்பல் ஒரே பல் தான் இருந்ததாம்—"சாலை வீதியில் மைல்கல் மாதிரி ஒற்றைப்பல் நிற்கிறது, அவர்பெண் எனக்கு வேண்டாம்" என்று விட்டாய். அப்புறம் அந்தத் திருக்களாவூர் ராமலிங்க ஐயர் பணத்தைக் கொட்டிக் கொடுக்கிறேன் என்று சொல்லி நம் வீட்டில் பழிகிடந்தார். அவர், தனக்குச் 'சுகஜீவனம்' என்றாராம், அதுவும் வேண்டாமென்று விட்டாய்.

கோதண்:—(உள்ளே கூப்பிடுகிறார்) மீனாக்ஷி! மீனாக்ஷி!!

(மீனாக்ஷி போகிறாள்)

சீனு:—அம்மா! அம்மா!! (கூப்பிடுகிறான்)

[மீனாக்ஷி வருகிறாள்]

மீனாக்ஷி:—ஸோப்பையும் டவலையும் வைக்க மறந்து போனால்—கூப்பிட்டார்.

சீனு:—அம்மா! இரு இப்பொழுது ஒரு சம்மந்தி வரப் போகிறார். அவருக்குச் சாவே இல்லை. வேணுமென்றால் பார்.

மீனாக்ஷி:—என்னடா இது. இது வென்ன குறும்பு!

சீனு:—சம்மந்திக்குச் 'ச' இல்லாமற்போனால் என்ன? வெறும் மந்திதான் அம்மா. பொய் சொன்னால் இதோ எட்டி நீயே பார்.

(சக்ரபாணிஐயரும் நாராயணனும் வாயிலண்டை வருகிறார்கள்.)

என்ன சொல். இந்தச் சம்மந்தி மூஞ்சியைப் பார்த்தால் அவருக்குச் சாவுஏதோ இந்த யுகத்தில் இருக்கிறாப்போல் தோன்றுகிறதா?

மீனாக்ஷி:—(எட்டிப்பார்க்கிறாள்) இதுஎன்னவோ வாஸ்தவமான வார்த்தைதான்!

(உள்ளே போகிறாள்)

சக்ரபா:—இந்த வீடாய்த்தான் இருக்கும். அப்பா, எத்தனை அலைச்சல். நீதான் வழியில் ஒருவரையும் அடையாளம் கேட்கவிடவில்லையே. உன் கூச்சத்தினால்தான் இத்தனை அலைச்சலும், நாராயணா!

(உள்ளே வருகிறார்கள்)

[மீனாக்ஷி மெல்லப் போய்விடுகிறாள். சீனுவாஸமூர்த்தி அடையாளம் தெரியாமலிருப்பதற்காகச் சட்டென்று தன் மயிரை அவிழ்த்துவிட்டுக்கொள்கிறான்]

சீனு:—வாருங்கள். யார் என்பது தெரியவில்லையே. அப்பா குளிக்கிறார். யார் வந்திருப்பதாகச் சொல்லட்டும்.

சக்ர:—அய்யர்வாள் வரட்டும். அவசரமில்லை. மெள்ள வரட்டும்.

சீனு:—ரயிலில் வந்தாப்போல் இருக்கிறது. ஏன் இவ்வளவு நேரம். மெயில் லேட்டோ? (நாராயணன் சீனுவாசமூர்த்தியைப் பார்த்துப் புன்னகை செய்கிறான். கோதண்டராம ஐயர் ஸ்நாநம் செய்துவிட்டு வருகிறார். சக்கரபாணி ஐயர் எழுந்து கும்பிடுகிறார்).

கோதண்:—உட்காருங்கள். என்ன சமாசாரம், தாங்கள் இன்னாரென்பது தெரியவில்லை!

சக்ர:—நான் பட்டணத்தில் வக்கீல். அங்கே 'டாக்டர்' சாமிநாத ஐயர் எனக்கு ரொம்பவேண்டியவர். அவர் தான் என்னைத் தங்களிடம் அனுப்பிவைத்தார். உங்கள் புத்திரனது ஜாதகத்தை வாங்கிக்கொண்டு போகலாம் என்று வந்தேன்.

கோதண்:—ஆகா! பெண் இருப்பது உங்களுக்குத்தானே? நீங்கள் எந்த ஊரோ?

சக்ரபா:—நாங்கள் ஆதியிலே கோயமுத்தூர்; உங்கள் பக்கத்திலும் எங்களுக்குச் சம்பந்தமுண்டு. வெகுகாலமாய்ப் பட்டணத்திலேயே வந்து இருந்துவிட்டவர்கள்.

(விசாலம் கண்ணாடியும் சந்தனமும் கொண்டுவந்து கோதண்டராம ஐயரிடம் கொடுத்துவிட்டுப்போகிறாள்.)

சக்ரபா:—இது உங்கள் குழந்தைதானே?

கோதண்:—ஆமாம். இவளுக்குநதான் இந்த வருஷமே 'இது'பண்ணிவிடவேண்டுமென்பது உத்தேசம்.

சக்ரபா:—நாராயணா, நம் பெட்டியில் எல்லா ஜாதகங்களையும் சரியாய் மறக்காமல் வைத்தோமோ?

கோதண்:—இவர் உங்கள் பிள்ளையோ?

சக்ரபா:—இவனா, நாராயணனா? என் ஸம்ஸாரத்தின் வழியிலே பந்து. ரொம்ப நல்ல பிள்ளை. 'மில்லர் ஸ்கூலில்' படிக்கிறான்.எங்கள் ஆத்தில்தான் இருந்து படித்துக்கொண்டிருக்கிறான். அவன் தகப்பனாருக்குப் பத்து பதினைந்து வேலிக் குடித்தனம். ஆனால் பாவம் பையனுக்கு ஐந்து வயதிலேயே தாயார் தகப்பனார் இரண்டு பேரும் விழுந்துபோய்விட்டார்கள். அனியாயம் 'பிளேக்கு' ஒன்று இருக்கிறது பாருங்கள். அப்பொழுதுமுதல் பட்டணத்தில் நம் மாத்திலேயேதான் இருந்து படித்துக்கொண்டு வருகிறான். நிலத்தைப் பார்த்துக்கொள்ள ஒருவருமில்லையே என்று விற்றேன். எந்தத்தெய்வமிருந்ததோ? வாங்கினவன் பாதிப் பணம் கொடுத்துவிட்டுப் பாக்கிக்கு ஆறுமாதத் தவணை கேட்டுக்கொண்டான். கொடுத்த பணத்தை 'அர்பத்நட்' டில் போட்டேன் ஸார். ஆறு மாதத்திற்குள் 'அர்பத்நட்' போய்விட்டது. அதனால்தான் பாதிப் பணமாவனது-தங்கினது. பையன் பத்தரைமாற்றுத் தங்கம் ஸார். இவனுக்குத்தான் தகுந்த இடத்தில் பார்த்துக்கொண்டிருக்கிறேன். சிவனே என்று என் பெண்ணையே கொடுத்து விடலாம்.ஆனால், கோத்திரமாய்ப் போய்விட்டது போங்கள். இல்லாவிட்டால் இத்தனை சிரமம் இல்லை.

பொதிகை நிகண்டு

[514-வது பக்கத் தொடர்ச்சி]

அரிமடங்கல் கால்கூற்று நடுவனிமன் சூல
 னறவன்மால் சமன்மறலி யந்தகன்றென் றிசைக்கோன்
தருமனமன் றென்னவன்செங் கோற்கடவுள் பாசன்
 சண்டன் ஞமன் கணிச்சியன்கா ராளூர்தி காலன்
கரியன்வைவச் சுதன்றண்ட தரனிருபத் தாறுங்
 காலன்பேர் குத்தனுஞ்சித் திரனுமவன் கணக்காம்
வராதிமன் பாசதரன் குடதிசையன் பெருக்கன்
 வலையாளி சலபதிசு ரூமன்வரு ணனுக்கே. 26.

வருணமறல் மழையலர்புட் கரமாரி புவனம்
 வாரிகார் வாருதகம் வனங்கமலம் பவனம்
இரதமஞ்சம் பரம்பயசு சலிலங்கீ லாலம்
 ஏரியம் பானீயம் புனலால காரங்
கருவியயம் பதமளக மம்புகோ வனிகம்
 சவர்தஞ்சி வனஞ்சிர்த்ர பயஞ்சலமம் புதங்கம்
பரமுத மஞ்சமப் புடனிவர் தோயம்
 பானிவெள்ளங் காண்டம்வா ருணநீரம் பானே. 27.

பாயுங்கால் வளியுலவை நீழல்சமீ ரணங்கம்
 பவமானே கோடைகொண்டல் பரிசனன்மா ஓரவோன்
சாயுரக வற்த்திகந்த வாகனன்ப்ர வஞ்சன்
 சலனனுயி ரொலியூதை கோதையரி கூதை
வாயுமாத் துயிர்ப்பனிலங் கந்தவகன் புலனே
 மாலிகந்த ஞசுகஞ்சட் கோணன்மா ருதமே
*யாயுசகன் வாதம்வந்து கூதிர்வங் கூழ் வேற்ற
 லாம்பவனம் வாடைசதா கதிகாற்றே ழாறே. 28.

ஆறுதென்றன் மலையக்கால் வசந்தன்மந்தா நிலமே
 யருஞ்சிறுகா லிளங்காறென் காறென்றி மென்கான்
மீறமந்த மாருதம்பத் தாங்கோடை மேல்கால்
 மிகுவடர்தை வாடைவட கால்கொண்டல் கீழ்கால்
தேறுயிர பானனுதா னன்சமன்வி யானன்
 றேவனு கன்கூர்மன் றனஞ்சிருதன் றசக்கால்
சூறைசா ரிகைசுழல்கால் கூதிருமூ திருமே
 சொற்பனிக்கா லூழிக்கால் சண்டமா ருதமே. 29.

* யாயுன்சகன் (பி-ம்)

உதியரசன் புருடவா கனனியக்கர் வேந்த
னொருதனத னிருநிதியான் மரகதன்வி மானன்
பதிசேகி தன்கனகன் மந்திரிபுட் பகத்தான்
பாக்கியன்பிங் கலன்கின்ன ரேசனள கேசன்
நிதியிறைவன் முட்காரன்வச் சிரவணன்பொக் கிஷனே
நிறைசெல்வன் சிவிகையன்மூன் றேழ்குபே ரன்பேர்
மதியருக்கர் பன்னிருவ ருருத்திரர்பன் னொருவர்
வசுக்களெட்டு மருத்தரிரண் டனைத்தும்வா னவரே. 30.

வானம்வெளி மங்குலண்ட மம்பரங்கோ வனந்த
மாகம்விசும் பாசினிமீ வான்கெதியந் தரங்கம்
தானமும்பர் நபங்காயம் விண்டலப்புட் கரம்விண்
சார்வியோ மங்ககன மாதிரங்குண் டலந்தோ
னனமிலாக் குடில்வெளி யாகாச முப்பா
னொருபெயரா மண்டகடா கங்கடக மோடு
மேனிலைபித் திகைதோடு கடமதற்கேழ் பேராம்
‡ மேருவின்றென் பால்வடபா லயனமிரு கதியே. 31.

கதிரவனென் றருணனூ ழலரிசுட ரிரவி
கனலிதின கரன்பருதி தரணியினன் சண்ட
னுதையனரி பானுதிவா கரன்வேந்த னழலோ
னொளிபதங்கன் பாற்கரன்றீ விரன்வெய்யோன்சவிதாப்
பிதிரனலி யெழுபரியோன் பகல்சோதி விசையன்
பேசுபனிப் பகைவிலோ சனனெல்லி தபன
னிதையனண்ட யோனிதின மணிசான்றோன் மாலி
யிருள்வலிவித் தகன்சூரன் விண்மணியா தவனே. 32.

ஆதித்தன் ஞாயிறு யிரங்கிரணி பகலோன்
அருக்கனெல்லை சம்புதிமி ராரிவிருச் சிகனே
யோதுற்ற வலஞ்சுற்றி கண்ணன்மார்த் தாண்ட
னுலகவிளக் கோராழி யான்கமல பாந்தி
சூதற்ற மித்திரன்செங் கதிரவா னிரண்டுஞ்
சூரியனும் பருதிவட்டம் விசையமு மண்டிலமும்
வேதிக்கு மொளிர்கிரணங் கரங்கிளர் தீவிரமாம்
வெயிலென்றா ழாதவமூர் கோள்வட்ட நிலையே. 33.

நிலவுபிறை மதியமுத கதிர்திங்க ளாவோ
னிசாபதியம் புலிகுமுத நண்பனிந்துக் களங்கன்
கலையன்முயற் கூடுசசி குரங்கிபசுங் கதிரோன்
கலாநிதிசி சாசரன்சு தாகரன்கு பேரன்
அலவனிம கரன்சாந்தன் குளிரியல்லோன் வேந்தன்
அரிகுடோ தயன்மானி யுடுபதிதண் சுடரே
நலவிதுதா னவன்சோமன் சந்திரனே மைந்தா
நன்னிலாச் சந்திரிகை நிலவின்பே ரறியே. 34.

அறிவோனங் காரகன்வக் கிரன்பவுமன் குருதி
யரத்தனில மகனனலன் குசன்பூம னாரல்
பிறதாயன் வளவனழல் மங்கலன்சே யுதிரன்
பெருந்தீக்கோண் மேடன்விருச் சிகன்செவ்வாய்க் கிருபா
னெறிமால்பண் டிதன்கணக்கன் மதிசேய்தேர்ப்*பாகன்*
நிபுணனனு வழிசாமன் வாக்கிபுந்தி புலவன்
செறிதாத னருணனறி வோன்சவுமன் பச்சை
சிந்தைகூ ரியன்மேதை புதன்பதினொன் பதுமே. 35.

பதிபிரகற் பதிபீதன் குருச்சிவ னரசன்
பகர்வேந்த னந்தணன்பொன் சுரரமைச்ச னுசான்
முதியசிகண் டிகன்வேத னண்டளப்பா னெனும்பன்
மூன்றும்வியா ழப்பெயரோர் கண்ணன்வெள்ளி சுங்கன்
றுதிகவிகாப் பியனுசன்பாற் கவன்பளிங்கு மழைக்கோள்
சுகன்புகர்சல் லியன்சிதன் போதிபுயல் காணன்
மதியசுர குருத்திங்கள் பிரசுரனொள் ளியனும்
வகுத்திருபான் சுக்கிரன்பேர் தொகுத்தனர்கா ரணரே.

சாரிகதிர் மகன்சவுரி காக்கைவா கனத்தான்
கரியனேய் முகனீலன் முதுமகன்பங் கந்தன்
சூரிமேற் கோள்சந்திற் சாவகன்கீழ் மகனே
முடவன்மந்தன் கலியன்விசி சனிபதினொன் பான்பேர்
சீரியரா குவின்பெயரே தமங்கரும்பாம் பாகுஞ்
சிகிமதியின் பகைகேதுச் செம்பாம்ப தாகுங்
கூரில்சனி மகன்மாந்தி§குளிகன்முப்பே ராகுங்
கோளேழுந் தொடுத்தநாட் கிழமையும்வா ரமுமே. 37.

மேடமதற் காட்டின்பே ரிடபம்விடைப் பேரா
மிதுனந்தா ரணங்கவைஞன் றணடியா ழிரட்டை
பாடல்விழாச் சயமகள்பா டவையாங் கற்கடகம்
பயில்சேக்கை ஞெண்டின்பேர் புலிசிங்கப் பேர்கள்
கோடுசிங்கப் பேர்பெண்கள் பேர்கன்னிப் பேராங்
கோல்சீரை தூங்கல்செட்டி வாணிகன்கட் டளைதுக்
காடுநிறை துலைதுலாந் துடர்மணியற் பனுந்தேட்
காம்பெயரும் விருச்சிகம்விற் பெயர்தனுசா*மகளே. 38.

மகரமது கலைபுல்வாய் சுறமாமெனன் றுரைப்பார்
வருபாண்டப் பொதுப்பேரே கும்பமதா மீன்பேர்
பகருமீ னப்பெயரா மோரையில்லி ராசி
பவனமுமா முதற்றொட்டு மூன்றுவட்ட மாகப்
புகுநந்தை பத்திரையே சயையுடனே யிருத்தை
பூரணையாந் திதிபக்க மாமிருக்கந் தாரை
பகுசிதந்தா ராகணநா ளுற்கைசுக்கை சோதி
பம்புடுமீன் கணந்தினம்பன் மூன்றுநக்கேத் திரமே. 39.

திரமுதனு ளேறிரலை மருத்துவனைப் பசியாழ்ச்
சென்னியுடன் பரிப்பேரு மச்சுவதி நாமம்
பரணிகிழ வன்சோறு கந்துன்முக்கூட் டடுப்புப்
பகல்காடு தாழிதார் சோடுதா சிதாதி
தருமனுட் பூதமிவை பதினாலு மதற்காம்
சாற்றளகி ருலாரல் வாணனங்கி யளக்க
ரிருவையறு வாயறுமீ னுடனு விதனேர [வைத்தனரே.
டெரிநாட்கார்த் திகைப்பேர்பன் னிரண்டெனெ

வையமுருட் பிரமனுட் ‡சகடுததி பண்டி
மானம்பார்மப ராதேநூற்றுலைமீ னுரோணி
மொய்புரோ கணியதின்பேர் மதிநாட்பே ராளன்
மும்மீனிந் திரன்பாலை நரிப்புறமார் கழியாம்
வெய்யவன்மான் றலைமாழ்கு மதியுமக சிரமாம்
வியன்சிலையா ழிறைசெங்கை மூதிரையா திரைப்பேர்
பொய்யில்கழை கரும்புபிண்டி யதிதிநாட் பாலை
புணர்தமா வண்புனிதம் புணர்பூசங் கொடியே. 41.

கொடிறுகுரு நான்வண்டுநீதைமதிபாற் குடங்கர்
குளம்பூசம் பாம்பாயில் கவைபணிநா ளென்கு
மிடுவேதா யிலியப்பேர் றென்னுமலி வாய்க்கா
லிசைவேள்வி கொடுநுகமுற் சனிபிதிர்நாண் மாசி
படியும்வேட் டுவனென்பான் மகமெலிசா விதனே
பகவதிநாட் கணைதுற்கை யிடைச்சனியும் பூரங்
கடையில்வரு சனிநெய்த்தோர் புயனுட்கு ரியனுட்
காணுந்தி பாற்குனியங் குனியேழுத் திரமே. 42.

உத்தமக்கைம் மீன்கன்னி கவுத்துவங்கா மரமே
யுடன்களிறு நீநாளை விரனல்வி யெண்பே
ரத்தமதாஞ் சுவையயறு துவட்டனு ணடுநா
ளளக்குநெய்மீன் புலிதச்ச னுடைப்பேர்சித் திரைக்கா
மெய்த்துளக்கு மீன்மரக்கால் காற்றினுள் விளக்கு
வீழ்க்கைவெறு நுகம்பதுமந் தியமெட்டுஞ் சோதி
*முத்தில்விளை நாட்சுளகு காற்றினுள் சேட்டை
முறம்வைகா சியும்விசா கந்தனைப்பன் ‡னுவரே. 43.

பனைப்பெயர்தேண் மித்திரனு ளனுடநாட் கிசைப்பார்
பாழியிந்த்ர னுட்சேட்டை வல்லாரை வேதி
*யனற்பெயருங் கேட்டைகுரு கானிதேட் கடைவில்
அசரனு ளன்றில் கொக்கா மேழ்பெயரு மூலம்
புனற்றினமே யுடைகுளமுற் குளமாம்பூ ராடம்
பூமிநாட் கூவன்மணி முடியானி யாடி

‡ விளம்பியதென் (பி-ம்) * பாசன் (பி-ம்)

§ குளிகனது பெயராங் (பி-ம்) *(பி-ம்) மகனே. ‡ (பி-ம்) சகடுதிதி. § கைமதிபார்ஷர்க் (பி-ம்). * (பி-ம்) முற்றில் ‡ (பி-ம்) ணுகவே. * யனைப் (பி-ம்)

தொனித்தகடை குளம்விசுநா ளுத்திராட மோணஞ்
சோணைமுக்கோன் மாயவனு ளலக்கைசிர வணமே. 44.

வண்கொடிப்பேர் பறவையா வணிநன்று வசுநாள்
வயிரமா மவிட்டப்பேர் வருணனுட் சுண்டன்
பண்குன்று செக்குப்போர் சதையப்பேர் நாளி
பாதநாண் முற்கொழுங்கோல் மிசையுநாட் புரட்டை
பெண்களிற்பூ ரட்டாதிப்¶பேர்நீப முரசு
பிற்கொழுங்கோ லாசறிவ‡னுத்திரட்டா திப்பேர்
நண்கடைமீ னிரவிநாட் டொழுப்பெருநாட்சே
நாவாய்ப்பேர் புருடநா ளிரேபதிக்காஞ் சால்பே. 45;

சாலியருந் துதிவடமீன் முப்பெயராந் தினமே
சமையமெல்லை யுடுக்காலா னியந்திவாத் திவச
மேல்வைநாட் பகல்வைக லல்கலும்பன் னிரண்டா
மெல்லைகால் பதம்போழ்து கொண்பொழுது வேலை
காலைசெவ்வி யாமமமை யம்பாணி யெல்வை
காலப்போ தீரேழ்நா ழிகைநாழி கடிகை
மேலிருத்தை பதங்கன்ன னுடிநா ழிகையாம்
விகலைகலை காலநுட்பந் துடியுடனுங் கணமே. 46.

கணமிறைமாத் திரைலேச மொல்லைசிறு வரையே
காலவிரை வாமொடியும் வல்லையுமற் றதற்காம்
பணியுநெடும் போதுநீட் டித்தனெ டித்தல்
பாணித்த னெடுநாட்பேர் பானுளே யரைநாள்
அணிதிவா வெற்பகற்பே ரெல்லிசிசாக் கங்குல்
அல்லியா பரிமாலை சாமநத்தம் யாமம்
உணருநிசி யாமினியி ராக்கருக்க லிரவாம்
உச்சிமத்தி யானநடுப் பகலேநன் பகலே. 47.

நன்புலரி விடியல்வைகல் வைகறைப்போ தாகு
நவிலுதையங் காலைப்பேர் யாமமதாஞ் சாம
மின்பமுறு சந்தியந்தி சாயமா லையின்பேர்
இருணிலந் துணங்கறல்கச் சனந்தமந் திவாந்தம்
வன்பினந்த காரமரி கருத்திமிர மாலை
மாசுமாம் பூரணைராச் சிலிவாலி யாகு
மன்பமராக் குகுவாமம் வாசிசுடர்க் கூட்ட
மையுமாம் பவ்வமுவாப் பூரணைப்பேர் வருமே. 48.

வருடமா யனஞ்சாமஞ் சமையாண்டப் பித்தம்
வற்சரப்பே ராருது மயனமதிற் பாதி
பருவமிரு தானியமா மதிதிங்கண் மாதம்
பல்லூழி மடங்கலுக முடிவையனுட் கற்பம்
பெருவயதா யுகமாயுள் வாணாளென் றுரும்
பின்றை பிற்றை பின்னைபின்பு பிந்திபின்னு ளாகும்
நெருநன்முன்பு முன்றை முற்றை முன்னைமுந்தை முந்து
நேற்றுநென்ன லொன்பானு முன்னுட்கா ரிகையே. 49.

¶ (பி-ம்) நாமமா
‡ னுத்திரட்டாதி (பி-ம்)

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[516-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 4. களம் 2.

இடம்:—ஸார்டிஸ்விற்கு அருகு பாசறையில் ப்ரூட்டஸின் கூடாரத்திற்கு எதிரில்.

[முரசு முழங்குகின்றது.]

ப்ரூட்டஸும் லூஸிலியஸும் லூஸியஸும் படைவீரர்களும் வருகின்றனர். டிடினியஸும் பிண்டாரஸும் அவர்களைச் சந்திக்கின்றனர்.

ப்ரூட்டஸ்:—நில், ஹோ! (1)

லூஸிலியஸ்:—குழூஉக்குறியைச் சொல்! ஹோ! நில். (2)

ப்ரூட்டஸ்:—என்ன, லூஸிலியஸ்ஸோ! காஸ்ஸியஸ் அருகு வந்திருக்கின்றானோ? (3)

லூஸிலியஸ்:—அருகுளன் அவன். தன் தலைவனிடத்திருந்து உனக்கு வந்தனைபுரிய, பிண்டாரஸ் வந்திருக்கின்றனன். (4)

[பிண்டாரஸ், ப்ரூட்டஸிற்கு ஓர் கடிதம் கொடுக்கின்றான்]

ப்ரூட்டஸ்:—எனக்கவன் புரியும் வந்தனம் இனியதே. பிண்டாரஸ், உன் தலைவன் தானே திரிந்தோ தீய வினையாளர்களாலோ, இழைத்தசில காரியங்களை யான் கழித்துவிட விரும்புதற்குத் தகுந்தபடி ஒருவாறு காரணமாகி யிருக்கின்றான். ஆயினும், அண்ணி அவன் வந்திருக்கின்றானாயின், தேறினவனாவேன். (5)

பிண்டாரஸ்:—என் பெருந்தகைத் தலைவன், தனக்குரிய தன்மையின் வண்ணமே பெருமையும் வினயமும் நிரம்பினனாய்த் தோன்றுவானே யல்லாமல் வேறொன்றும் யான் ஐயிர்க்கவில்லை.

பாசறை - படைகள் தங்கியிருக்கும் இடம்.
லூஸிலியஸ்—ப்ரூட்டஸின் நண்பன்.
லூஸியஸ்—ப்ரூட்டஸின் ஏவலாள்.
டிடினியஸ்—ப்ரூட்டஸின் நண்பன்.
பிண்டாரஸ்—காஸியஸின் ஏவலாள்.

ப்ரூட்டஸ் போர்ப்படை திரட்டி ஸார்டிஸ் என்னும் இடத்திற்கருகு தங்கியிருக்கின்றான். இதற்குள்ளேயே, ப்ரூட்டஸிற்கும் காஸ்ஸியஸிற்கும் மனவேறுபாடு விளைந்திருக்கின்றது.

காஸ்ஸியஸின் செய்தியைத் தெரிந்துகொண்டு அவனை அழைத்துவரும்படி ப்ரூட்டஸ் தன் நண்பன் லூஸிலியஸை அனுப்பியிருந்தனன். காஸியஸ், தன்னைக்கண்டு பேசித் திரும்பிய லூஸிலியஸுடன் தன் ஏவலாளன் பிண்டாரஸையும் அனுப்பியிருக்கின்றான். இவ்விருவரும் வந்து ப்ரூட்டஸைச் சேர்வதுடன் இக்களம் ஆரம்பமாகின்றது. காஸ்ஸியஸும் இவர்களைத் தொடர்ந்து வந்துசேர்வான்

(1), (2). மாறுவேடம் பூண்டு ஒற்றுடவந்துள பகைவனல்லாமல், தம் படையைச் சேர்ந்தவனே என்று தெரிந்துகொள்ள, ஒவ்வொரு படைக்கும் ஒரு குழூஉக்குறி (Password) இருக்கும். இருள் சூழ்கின்ற நேரமாதலின், ப்ரூட்டஸ், லூஸிலியஸை அடையாளந் தெரிந்துகொள்ளமாட்டமல், 'நில்' என்று உரப்புகின்றான். லூஸிலியஸும் அப்படியே ப்ரூட்டஸைத் தெரிந்துகொள்ளாமல், "குழூஉக்குறியைச்சொல்" என்று கேட்கின்றனன்.

(3) குரலிலிருந்து லூஸிலியஸைத் தெரிந்துகொண்ட ப்ரூட்டஸ், காஸ்ஸியஸினிடம் அவன் சென்றறிந்த செய்தியைப்பற்றி வினவ ஆரம்பிப்பவனாய், காஸ்ஸியஸ் வந்திருக்கின்றானோ என்று கேட்கின்றான்.

(4) இதற்குள், லூஸிலியஸ், தன்னுடன் காஸியஸின் ஏவலாளன் பிண்டாரஸ் வந்திருப்பதை ப்ரூட்டஸிற்குத் தெரிவிக்கின்றான். தன்பொருட்டு உனக்கு வந்தனைகள் புரியும்படி காஸ்ஸியஸ் தன் ஏவலாளன் பிண்டாரஸை இதோ அனுப்பியிருக்கின்றான், காஸ்ஸியஸும் கையருகே வந்துளன், என்பது பொருள்.

ப்ரூட்டஸ்:—அவன் அயிர்க்கப்படுகின்றானல்லன். ஒரு வார்த்தை, லுஸிலியஸ்; உன்னை அவன் எவ்வாறு ஏற்றுக்கொண்டனன் என்பதையான் தெளிதல் வேண்டும். (6)

லுஸிலியஸ்:—வினயமுடன் வேண்டளவு உபசரித்தான். எனினும், முன்னைப்போல், அந்நியோன்னிய பாவனையேனும், கரவின்றி மனங்கலந்து நட்புடன் அளவளாவியதேனும் இருந்ததில்லை.

ப்ரூட்டஸ்:—உருகிய நட்பினன் ஆறிக்குளிர்ந்து உறைவதைக் கூறினாய் (7). லுஸிலியஸ், என்றும் இதனைக் குறித்துக்கொள்—அன்பானது நோயுற்று அழியத் தலைப்பட்டவுடன், வலிந்து சில சடங்குகளை வழங்குவதாகின்றது (8). வெளிப்படையாய் விவகரிக்கும் கலப்பிலா விசுவாசத்தில் சூதிற்கு யாதும் இடமில்லை. மற்று கையிற்கொண்ட வெம் புரவி போல், புரையோடிய மனிதர் தங்கள் சூரத்தைப் பெரிது தோற்றுவித்துப் பின் தூண்டுமுள் தைக்க நேருங்கால் கபடமுடைய கட்டுவாணிக் குதிரை போன்று சிரஞ்சரிந்து விழுந்துவிடுவார். (10) அவன் சேனை வருகின்றதோ?

லுஸிலியஸ்:—இன்றிரவு ஸார்டிஸில் தங்க நினைத்திருக்கின்றனர். பெரும்பாகம், பொதுவில் குதிரைப் படை முழுவதும், காஸ்ஸியஸுடன் வந்திருக்கின்றன.

[படை நடக்கும் அரவம் உள்ளே கேட்கின்றது]

ப்ரூட்டஸ்:—இதோ! வந்து விட்டனன். இனிதவனைச் சந்திக்கச் செல்.

[காஸ்ஸியஸும் படைவீரர்களும் வருகின்றனர்]

காஸ்ஸியஸ்:—ஓகோ! நில்லுங்கள் (11)

ப்ரூட்டஸ்:—ஓகோ! நில்லுங்கள். இச்சொல்லை நெடுகச் சொல்லுங்கள் (12)

உள்ளே:—நில்!

உள்ளே:—நில்!

உள்ளே:—நில்!

காஸ்ஸியஸ்:—பெருமைசால், மைத்துன, எனக்கு நீ பொல்லாங்கு செய்தனை (13)

ப்ரூட்டஸ்:—நியாயமோ இதுவென்று தெய்வங்காள் நீங்களே சொல்லுங்கள். என் பகைவருக்கும் யானொரு பொல்லாங்கு செய்ததுண்டோ? இல்லையேல், என்னொரு மைத்துனற்கு யான் பொல்லாங்கு செய்வதெங்ஙனம்?

காஸ்ஸியஸ்:—ப்ரூட்டஸ், இந்த உன் கௌரவ உருவம் குற்றங்களை மறைத்துவிடுகின்றன; நீ அவைகளைச் செய்யுங்கால்—(14)

ப்ரூட்டஸ்:—பொறு பொறு, காஸ்ஸியஸ்; உன் குறைகளை மெல்லக்கூறு.—உன்னை யான் நன்கறிவேன். நமக்கிடை நட்பன்றி வேறொன்றும் காணலாகா நம்மிரு சேனைகளின் கண்களுக்குமுன் இங்கு நாம வாதாட வேண்டா (15). அவர்களை அகலச்சொல்; பிறகு என்னுடைய கூடாரத்தில் காஸ்ஸியஸ், உன் குறைகளைப் பெருக்கி யுரை, நானும் காதுகொடுத்துக் கேட்பேன். (16)

காஸ்ஸியஸ்:—பிண்டாரஸ், நம் சேனைத்தலைவர்கள் தம் படைகளை இந்நிலத்தினின்று சிறிது செலுத்திப்போம்படி ஏவுவாய்.

ப்ரூட்டஸ்:—லுஸிலியஸ், நீயும் அவ்வாறே செய்: நாங்கள் உரையாடி முடிக்கும்வரையில் ஒருவனும் என் கூடாரத்திற்கு வரவேண்டா. லுஸிலியஸும் டிடினியஸும் வாயிலைக் காக்கட்டும்.

(5) காஸ்ஸியஸின் காரியங்கள் சில என்னால் ஏற்றுக் கொள்ளத்தகாதனவாயிருக்கின்றன. எனது நட்பிலிருந்து திரிந்தே அவன் இவ்வாறு செய்கின்றானோ அல்லது, அவன் ஏவிய காரியத்தைச் செய்பவர் தீயவர்களாக இருந்து இவ்வாறு எனக்கு மாறாகச்செய்கின்றதால் இது விளைகின்றதோ தெரியவில்லை. எனினும், காஸ்ஸியஸ் வந்திருக்கின்றானாதலின் அவனையே கேட்டுத் தெரிந்துகொள்வேன் என்பது பொருள்.

(6) ப்ரூட்டஸ் லுஸிலியஸைத் தனியாக அழைத்துக் கேட்பது இது.

(7) மிகவும் நெருங்கி மனமுருகக் கலந்திருக்க ஒரு நண்பன், மெல்ல மெல்லத் தன் நட்பு நீங்கி நொதுமலன் போல் ஆகிவருகின்ற செய்தி காஸ்ஸியஸின்பால் நிகழ்கின்றதென்பது நீ சொல்லியதிலிருந்து தெரியவருகின்றது.

(8) உள்ளன்பு போனால்தான், உபசாரச் சடங்குகளைச் செய்யத் தலைப்படுகின்றனர்.

(9) புரையோடிய மனிதர் - உள்ளே ஒன்றுமில்லாத வெறும் மனிதர்.

(10) கடிவாளத்தைக் கையில் பிடித்திருக்கும் வரையில் சூரம் பெரிதுடையதுபோல் தோன்றி, எறி ஓட்டுங்கால் தளர்ந்து தலை சாய்ந்து விழும் குதிரையைப்போல், வேண்டாதபோது பெருநட்புடையவர்போல் பாவிக்கும் சிலர் சமயத்தில் சோர்ந்துவிடுவார்—அன்னவர்களில் ஒருவன் காஸ்ஸியஸ், என்பது பொருள்.

(11) இது காஸ்ஸியஸ் தன்னைத் தொடர்ந்துவரும் படைவீரர்களைப் பார்த்துச் சொல்லியதாதல் வேண்டும்.

(12) காஸ்ஸியஸுடன் வந்த படையைப் பார்த்து அங்கேயே நில்லுங்கள் என்று கட்டளையிடுகிறான். முன்னணியிலிருந்தவர்களுக்கு மாத்திரம் இது கேட்குமாதலால் "அவரவர் அவர்களுக்குப்பின்னால் இருப்பவர்களை நிற்கும்படி சொல்லுங்கள்" என்பது பொருள்.

(13) ப்ரூட்டஸின் சகோதரியை மணந்திருப்பதால் காஸ்ஸியஸுக்கு அவன் மைத்துனனாகின்றான்.

(14) நீ இப்படிக் கௌரவமாய்ப் பேசுவதை நோக்குகின்றவர், ஒருவருக்கும் ஒரு குற்றமும் செய்யமாட்டாதவன் நீ என்று எண்ணிவிடுவார். ஆதலின், இந்த வேடத்தால் நீ பிறர்க்கிழைக்கும் பொல்லாங்குகளை மறைத்துவிடுகின்றாய், என்பது பொருள். "நீ அக்குற்றம் செய்யுங்கால்" என்று இன்னும் சொல்லத்துவக்குகையில் ப்ரூட்டஸ் அவனைத் தடுக்கின்றான்.

(15) நம்மிருவருக்கும் மனவேறுபாடு விளைந்திருக்கின்றதென்பதை நம் சேனையிலுள்ளவர்கள் அறியலாகாது; ஆகையால் இங்கு அவர்களுக்கெதிரில் நாம் வாதுசெய்ய வேண்டா, என்பது பொருள்.

(16) இதனால் ப்ரூட்டஸ் உள்ளொன்றுவைத்துப் புறமொன்று நடிக்கத்தக்கவன் என்பது தெரிகின்றது. "நமக்குள்ளே என்ன விரோதம் இருந்தாலும் அயலார்க்குத் தெரிந்தால் காரியம் கெட்டுப்போகுமாகையால், தனியே இவைகளைப்பற்றிப் பேசுவோம்" என்கின்றான். "உள்ளே கொலைசெய்யும் எண்ணம் குடிகொண்டிருப்பதை உங்கள் முகம் காட்டாதபடி சிரித்து மறைத்துக்கொள்ளுங்கள்" என்று இவன் முன்னே சதியாளர்களுக்குக் கற்பித்த சூழ்ச்சியும் இங்கு நினைத்துக்கொள்வதற் குரியது. ப்ரூட்டஸ் முற்றிலும் கபடமற்றவனென்றும் சனங்களுக்கு விடுதலையளிக்கும்வண்ணம் ஸீஸரைக்கொன்றானென்றும், கருமத்திற்கேற்ற கருவி காலம் இடம் முதலியவைகளைத் தேர்ந்தியற்றும் திறமையற்றவனாயினும் தூய்மையான எண்ணமுடையவன் ப்ரூட்டஸ் என்றும் சிலர் மதிக்கின்றனர். ஷேக்ஸ்பியரின் கருத்து அதுவன்று.

களம் 2. முற்றிற்று.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[490-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து. 3-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி
வழுவிலா வடிமை செய்ய வேண்டுநாம்
தெழிகுர லருவித் திருவேங் கடத்து
எழில்கொள் சோதி யெந்தைதந்தை தந்தைக்கே.

குறிப்புக்கள்:—"நாம்" ஆழ்வார்தம் திருவுள்ளத்தையும் தன்னைப்போன்ற பகவானையே சிந்தித்துப் பக்தி செய்யும் பக்தர்களையும் ஸதாஸர்வகாலம் தொண்டு செய்யக் கூப்பிடுகிறபடியால் "பன்மை" பிரயோகம். "எழில்கொள் சோதி"—வடிவழகுடைய திவ்விய மங்கள (திருவேங்கடமுடையான்) விக்ரஹம். "வழுவிலா வடிமை" - ராஜோபசார ரீதியான அடிமைத் தொண்டில். "வழுவு"-ஏகதேசம் விட்டுப்போதல். இப்படி விட்டுப்போன அம்சத்தை நிறைவேற்றுவதன் நிமித்தம் மற்றொருவர் பூர்த்திசெய்யவேண்டி வருமாகையால் அத்தொண்டில் பிறர் ஒருவொருக்கும் பங்குஏற்படும். இது—"தொண்டுக்கு வழுவு"

"இப்படி நிரவதிக ஸௌந்தரியாதி கல்யாணகுணங்கள் நிறைந்த திருவேங்கடமுடையானைக்கண்டு "தன்னுயிரை நிலைபெற்ற" ஆழ்வார் அவனது குணங்களில் ஈடுபட்டவராய் அவனை அநுபவிக்க வேண்டுமென்று தமக்குத் துணையாகத் தன் திருவுள்ளத்தையும் தம்மைப்போன்ற வேறு பகவத் தாசர்களையும் குறித்துத் திருவேங்கடமுடையானின் குணாநுபவம் செய்ய வாருங்கோள். "குணாநுபவம்" பண்ணுகையாவது அவன் திருவடிகளிலே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைக்கு உசிதமான தாஸ்யத்தியைப் பண்ணுகை என்கிறார்"—ஆறாயிரப்படி.

2-ம் பாசுரம்.

எந்தை தந்தை தந்தைதந்தை தந்தைக்கு
முந்தை வானவர் வானவர் கோனொடும்
சிந்து பூமகிழுந் திருவேங் கடத்து
அந்த மில்புகழ்க் காரெழி லண்ணலே.

திருவேங்கடத்து, அந்தமில்புகழ் - எத்தனை துதித்தாலும் முடிவு பெறாத கீர்த்தியுள்ள, காரெழில் - மேகம்போல் சுந்தரனை, அண்ணலே - ஸ்வாமியே, என் ஸ்வாமிக்கும் ஸ்வாமிக்கும் ஸ்வாமிக்கும் முந்தை - ஆதிமுதல் அதாவது என் குருக்கள் அவர் குருக்களுடைய அவர்கள் குருக்கள் இதுபோல்குருக்கள் பரம்பரைக்கெல்லாம் குருக்கள் பகவானென்று கருத்து. ஆகையால் பக்தர்களே வாருங்கோள் தொண்டு செய்யவென்று விளித்தும் அவர்கள் வரக்காணமையாலே அவர்கள் வைகுண்டத்தில் சென்றல்லவோ ஒய்வில்லாத கைங்கரியம் செய்யவேண்டும். திருமலைக்கு ஏன் விளிக்கிறீரென்று கேட்டதாக ஆழ்வார் உட்கொண்டு 2-3 அடிகளில் அந்தச் சந்தேகத்துக்குப்பதில் சொல்லுகிறபடி. வானவர் கோனொடு - வைகுண்டத்தில் நித்திய ஸூரிகளின் தலைவரான விஷ்வக்ஸேநரோடு, வானவர் - நித்தியஸூரிகள் சிந்து பூமகிழும் திருவேங்கடம் - திருமலையில் சிந்து - அர்ச்சனை செய்யும் போழ்து உதிரும் - பூ - பூக்கள், மகிழும் - எங்கும் சிதறிக்கிடந்து திருமலையை அலங்கரிப்பதைக் காணலாம். வைகுண்ட வாஸிகளே பூஜை செய்யத் திருமலைக்கு வரும்போது நீங்கள் வருவது பிராப்தம்.

3-ம் பாசுரம்.

அண்ணல் மாய னணிகொள் செந்தாமரைக்
கண்ணன் செங்கனி வாய்க்கரு மாணிக்கம்
தெண்ணிறைச் சுனைநீர்த் திருவேங் கடத்து
எண்ணில் தொல்புகழ் வானவ ரீசனே.

உரை:—மாயன் - ஆச்சரிய பூதன். அணிகொள்- அலங்கார யுக்தன். செந்தாமரைக்கண்ணன்-செங்கனி வாய்க் கருமாணிக்கம். தெண்ணிறை-தெளிந்தநீர் நிறைந்துள்ள திருவேங்கடத்து, எண்ணில்- அளவிடக்கூடாத தொல்புகழ்- அநாதிபாய்க்கல்யாணகுணங்களுடையவனென்று புகழ்பெற்றவன், அண்ணல் - ஸ்வாமியானவன்; வானவர் - நித்தியஸூரிகளுக்கு ஈசன், பராபரக்கடவுள்.

குறிப்பு:-சென்ற பாசுரத்தில் சொன்னதையே, வானவர்க்குப் பூஜை வழிபாடு செய்யத்திருமலையில் கோவில் கொண்டிருக்கும் ஈசன் மனுஷ்யர்களுக்கும் பூஜைக்கு உதவக்கூடுமோவென்ற சங்கை நிவர்த்தமாக, எவ்வளவோ எண்ணி அளவிடக்கூடாத வானவர்களுக்கு உபகரிக்கும் பரமபுருஷன் உங்களுக்கும் பூஜை செய்ய வேங்கடத்தில் இருந்து அதை நன்கு ஏற்றுக்கொள்வன், என்று திரும்பியும் காரணம் காட்டி நிரூபிக்கிறார். பகவானுடைய ஔதாரியத்திற்குத் தட்டுத் தடங்கல் அளவு எல்லைகள் இல்லை என்றபடி.

4-ம் பாசுரம்.

ஈசன் வானவர்க் கென்ப னென்றாலது
தேச மோதிரு வேங்கடத் தானுக்கு
நீசனே னிறையொன் றுமிலே னென்கட்
பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கே.

பொழிப்புரை:—"சுவரூபத்தினாலும் சுபாவத்தினாலும் மற்றும் எல்லாப்பிரகாரத்தாலும் இனியில்லையென்னும்படி தாழ்ச்சியுற்று அற்பனாயிருந்த என் பக்கலிலே சிநேகம்பண்ணி எனக்குத் தன்னை ருசிக்கும்படி தந்தருளின மஹாகுணத்தையுடையவனுக்கு அயர்வற்ற அமரர்களுக்குத் தன்னை போக்கியமாகக் கொடுக்குமென்பது ஒரு ஏற்றமோ"—ஆறாயிரப்படி.

5-ம் பாசுரம்.

சோதி யாகி யெல்லா வுலகுந்தொழு
மாதி மூர்த்தி யென்றா லளவாகுமோ
வேதி யர்முழு வேதத் தமுதத்தைத்
தீதில் சீர்திரு வேங்கடத் தானையே.

நீசனாகிய அடியேனைத் தன்பக்கல் நேசம் வைக்கச் செய்ததுதான் திருவேங்கடத்தானுக்கு உயர்ந்த ஏற்றமாகுமோ என்று சென்ற பாசுரத்தில் செப்பியதைத் தொடர்ந்து அவனுக்கு வேறு ஏற்றம் கூறவேண்டியதாயிருக்க எல்லா உலகங்களும் தொழும் ஆதிமூர்த்தி என்றால்தான் அவனுக்கு அது அளவாகாதென்று இப்பாசுரத்தில் அருளிச்செய்வது எப்படிப் பொருந்தும் எனில் அது பின்வருமாறு - "அடியேன் தாழ்ந்தவரில் நீசனாயினேன் - விஷ்வக்ஸேநராகிய வைகுண்ட வாஸிகளின் தலைவர் பக்தர்களுக்கு முதலாய் அமைந்தவர். அடியேனையே பக்தனாக ஏற்றபோது நான் கூவி அழைக்கும் மற்றுள்ள உலகத்தாருக்கு அவன் தன்னைத் தொழத்ததும் என்பதற்குச் சொல்லவேண்டியதில்லை இப்படி மற்றுள்ள உலகத்தாருக்கும் தான் தன்னைப்பூஜைசெய்துவழிபடக்கொடுத்தாற்றான் திருவேங்கடமுடையானுக்கு அது பெரும்புகழாகாது. இப்பாசுரம் நைச்சியாநுஸந்தானரீதியாய் அருளிச்செய்த பாட்டு. கடைசி இரண்டடிக்கும் பொருள்—"நாம் பகவானின் சீர்மையை அளவிட்டுக் கூறமுடியாது. வேதங்கள் அவனின் பெருமையை ரசமாயும் இனிதாயும் கூறும். அங்குக் கண்டுகொள்க."

ஷெல்லி

பார்ஸி பிஸி ஷெல்லி என்பவர் இங்கிலாந்தில் ஸஸ்ஸக்ஸ் மாகாணத்திலுள்ள வார்னும் என்ற இடத்திலுள்ள பீல்ட் பிளேஸில் 1792 ம் வருடம் ஆகஸ்டு மாதம் நான்காந் தேதி பிறந்தார். அவரது தகப்பன் பெயர் டைமதி ஷெல்லி, அவரது தாய் பெயர் மிஸ் பில்போல்ட். அவரது குடும்பம் பெரிய ஜமீன் குடும்பம்; மிகப் புராதீனமானது; பெருமை வாய்ந்தது.

ஷெல்லி தனது ஆறுவது வயதில், ஆண்டுள்ள ஒரு மாதாகோவிலைச் சேர்ந்த பாதிரி ஒருவரிடமிருந்து கல்வி போதிக்கப்பட்டார். பத்தாவது வயதில், ஷெல்லி பிரண்டுபோர்டிலுள்ள சியன் அவுஸ் கல்விக் கழகம் என்ற பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார். அவர் அப்போதே படிப்பில் அதிக கவனம் செலுத்திவந்தார் எப்போதும் ஆழ்ந்த சிந்தனையிற் காலங்கழித்தார்; விளையாட்டு விஷயங்களில் அதிகப் பிரியங்கொள்ளவில்லை; அவர் மிகுந்த மெலிந்த சரீரமுடையவர்; அவர் கண்கள் எப்போதும் ஒளிபொருந்தியனவாய் இருந்தன. அவர் மயிர் மிகவும் மிருதுவாய் இருந்தது. ஒரு பள்ளிக்கூடத்து மாணவனொருவன், பையனது ஆடைகளை யணிந்துள்ள ஒரு பெண்ணைப் போலிருந்தார் என்று கூறுகிறான். 1810 ம் வருஷம் ஷெல்லி ஆக்ஸ்போர்டில் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினார். ஆனால் ஆக்ஸ்போர்டில் அவர் இன்னும் அதிகமாகப் படிக்கும்படியாக நேரவில்லை. எல்லாம் விதிவசம். "நிரீசுவரவாதத்தின் அவசியம்" என்ற ஒறு சிறு புத்தகத்தை எழுதி அவரும் இன்னொருவருமாகச் சேர்ந்து வழங்கியதன் காரணமாக அவர்களிருவரும் 1811 ம் வருஷம் ஆக்ஸ்போர்டிலிருந்து வெளியே துறத்தப்பட்டார்கள். இதன்பின் ஹாரியட்வெஸ்ட்ப்ரூக் என்ற பரிபக்குவமடைந்த பெண்ணை ஷெல்லி காதலிக்கத்தொடங்கி, கிரட்னகிரீன் என்ற இடத்திற்கு அவளை அழைத்துக்கொண்டு போய்விட்டார். ஷெல்லியும், அவரது மனைவியான ஹாரியட்டும் எடிண்பர்க், யார்க், கெஸ்விக் என்ற இடங்களில் வசித்து வந்தார்கள். 1813-ம் வருஷம் செப்டம்பர்மாதம் வரையில் ஹாரியட்டிடம் ஷெல்லி நீங்காத காதல் கொண்டிருந்தார். ஹாரியட்டின் சகோதரியினால் ஷெல்லிக்கும் ஹாரியட்டுக்கு மிருந்த பரஸ்பரநேசம் கெட்டுப்போய்விட்டதாகத் தெரியக்கிடக்கிறது. மேரி காட்வின் என்பவளை ஷெல்லி மே மாதம் சந்தித்தார். இவர்களிருவருக்கும் காதல் ஏற்பட, இவர்கள் இங்கிலாந்துக்கு, மேரிகாட்வின் என்பவளது இரண்டாவது தாயின் பெண்ணுடன் திருப்பினார்கள். பிஷப்கேட்டில் மேரிகாட்வினும், ஷெல்லியும் மே மாதம் வரையில் வசித்துவந்தனர். இதற்குள் அவர்களுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. பின்பு இவர்களிருவரும் சுவிட்சர்லாந்துக்குச் சென்றனர். அங்குச்சிலநாட்கள் தங்கிய பைரன் என்ற கவியுடன் சிநேகிதங் கொண்டனர். பின்னர் இங்கிலாந்துக்குத் திரும்பி வந்தனர். நவம்பர் மாதம் ஷெல்லி உரோமாபுரிக்குச் சென்றார். அங்கு ஒரு நாள் ஷெல்லியும், வில்லியம்ஸ் என்பவரும் கடலில் படகில் சென்றுகொண்டிருக்கும்பொழுது புயலடிக்க அவர்களிருவரும் மறைந்துபோயினர். சற்று நேரத்திற்குப்பின் கடலோரத்தில் அவர்களது பிரேதங்கள் அலைகளால் கொண்டு வந்து ஒதுக்கப்படவும், ஷெல்லியின் அஸ்திகளுக்கெனப் பிரத்தியேகமாய் உரோமாபுரியில் உள்ள ப்ராடஸ்டண்டு புதை பூமியில் சமாதியில் வைக்கப்பட்டன. இனி, ஷெல்லியின் கவிகள் சிலவற்றை இங்குமொழிபெயர்த்தெழுதுவோம்.

'ஷெல்லி' நந்தவனம்—ரோஜா

காதலின் தத்துவம்.

நீர் ஊற்றுக்கள் ஆற்றினுடன் கலக்கின்றன. ஆறுகள் சமுத்திரத்தில் சங்கமமாகின்றன. ஆகாயத்தில் வீசும் காற்றுக்கள் எப்போதும் ஒருஇனிய உணர்ச்சியுடன் கலக்கின்றன; உலகத்திலுள்ள வஸ்து எதுவும் தனியாயில்லை; ஒரு தெய்வீகமான விதியினால் எல்லா வஸ்துக்களும் ஒன்றில் மற்றொன்று கலக்கிறது. ஏன் நான் உனது தேகத்திற் கலக்கக் கூடாது? மலைகள் உயர்ந்த ஆகாயத்தை முத்தமிடுகின்றன. கடலலைகள் ஒன்றை மற்றொன்று ஆலிஙகனஞ் செய்கின்றன. தனது சகோதர மலரை உதாசீனஞ் செய்கின்ற எந்தச் சகோதரி மலரையும் மன்னிக்க முடியாது; சூரிய ஒளி பூமியை ஆலிங்கனஞ் செய்கிறது. சந்திர கிரணங்கள் கடலை முத்தமிடுகின்றன; இம்முத்தங்கள் என்ன மதிப்புள்ளன— நீ என்னை முத்தமிடாவிட்டால்?

வானம்பாடி

சந்தோஷகரமான ஆவியே; உனக்கு மங்களம். பறவையே நீ எப்போதும் ஆகாயத்திலிருந்தும், ஆகாயத்தினருகிலும் உனது இன்ப உணர்ச்சிகளை முன்யோசனையில்லா தவித்தையின் இன்னிசைகளில் பொழிகிறாய். உயரமாகவும், இன்னம் உயரமாகவும் நீ பூமியிலிருந்து எழுகிறாய். ஒரு அக்கினிஜ்வாலையாகிய மேகத்தைப்போல எழுகின்றாய். நீ நீலநிறமான ஆழியின்மேல் உனது சிறகுகளை வீசுகின்றாய். நீ பாடிக்கொண்டே உயரப் பறக்கின்றாய், பறந்து கொண்டே பாடுகிறாய். அஸ்தமித்த சூரியனது பொன்னிறமான பிரகாசத்தில் அப்பிரகாசத்தை மேகங்கள் தழுவுகின்றன. அப்பிரதேசத்தில் நீ மிதக்கின்றாய், ஓடுகின்ற அருபியான ஒரு இன்பத்தின் பந்தயம் இப்போது தான் ஆரம்பித்ததுபோல் கலப்புநிறங் கலந்த நீ ஓடுமிடத்தைச் சுற்றிச் சாயங்காலம் உருகுகின்றது. ஆகாயத்திலுள்ள ஒருநக்ஷத்திரத்தைப்போலுள்ளாய்; சூரியவெளிச்சத்தில உன்னைப் பார்க்க முடியாதவண்ணம் ஓடுகிறாய்; எனினும்உனது சந்தோஷகரமான கூச்சலைக் கேட்கிறேன். அந்த வெள்ளி நிறமான பிரதேசத்தில் உண்டாகும் கூரிய அம்புகளைப்போல அங்கே விளக்கு வெளிச்சம் சற்று தூரம் முதலில் வீசி, வெள்ளிய விடியற்காலையில், தெளிவாக, நம்கண்கள் பார்க்க முடியாதபடி நீபாடுகிறாய்; அதனால் நீ என்று நாங்கள் தெரிந்துகொள்கிறோம். பூமியும், ஆகாயமும் உனது குரல் உரக்கச் சப்திக்கின்றன. இரவும்மேகங்கள் அதிகமாயில்லாதபோது ஒரு தனிமையான மேகத்திலிருந்து சந்திரன் தனது தண்ணிய கிரணங்களைப் பொழிகின்றது. ஆகாய முழுவதும் சந்திரகிரணங்கள் நிரம்பியிருக்கின்றன. நீ எத்தகைய பறவை என்று எங்களுக்குத் தெரியவில்லை; உன்னைப்போல எது உளது? வானவில்லிலிருந்தும் மேகத்திலிருந்தும் நீ பொழிகின்றதைப்போல் ஒள்ளியதுளிகள் கண்டிலம். உன்னிடமிருந்து இனியகீதமழை பொழிகின்றது. ஒருகவிஞன் தனது எண்ணத்தினொளியிலேயே மறைந்து தானகப் பல தோத்திரப்பாக்களைப் பாடுவதுபோல் உலகமுழுவதையும் அவனே இயற்றுகின்றான். உலகத்தினிடை பச்சாதாபத்தையு, நம்பிக்கையையும், பயஙகளையும் ஊட்டுகிறான். அவ் விஷயங்களை உலகம் கவனிக்க

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி
நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணா 0-12-0

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களை யுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணா 0-6-0

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை சென்னை.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C.C.S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciatve forword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM

PURASAWALKAM :: VEPERY, MADRAS.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலா நிலயம். வேளாளர் வீதி. புரைசைபாக்கம். சென்னை. விலை ரூ. 1—4—0

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:— அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா, விளம்பிறைல் வெட்கக்கேடு. கல்லாதவர்களை நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார் திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இளைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:— K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறுத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R. B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவசரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் காவல்.

களவியற் காரிகை:—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறுத நூல். அகப்பொரு ளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0. ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். ஏழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னுப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

ஆயுதப்பரிஹரணம்:—ஐரோப்பாவில் ஆயுதப் பரிஹரணம் செய்ய, சென்ற சில வருஷங்களாக முயலப்படுகின்றது. எனினும் யுத்ததளவாடங்களை அமைத்தல் இன்னும் நிற்கவில்லை. 1925-ம் ஆண்டுமுதல் 1930 ஆண்டுவரை 6 கோடியே 70 லட்சம் பொன்மதிப்புள்ள ஆயுதங்களும் வெடிமருந்துகளும் 35 நாடுகளிலிருந்து ஏற்றுமதியாயிருக்கின்றன. இவற்றில் மூன்றில ஒரு பங்கு இங்கிலாந்திலிருந்து ஏற்றுமதியாயிருக்கின்றது. 1930 வது வருடத்தில் 1 கோடியே $13\frac{1}{2}$ லட்சத்து 50 ஆயிரம்பொன் மதிப்புள்ள யுத்ததளவாடங்கள் ஏற்றுமதியா யிருக்கின்றன. இவற்றில் மூன்றில் ஒரு பங்கு இங்கிலாந்து ஏற்றுமதி செய்துளது. பிரான்ஸ் 100 க்கு 12 வீதமும், அமெரிக்கா 100க்கு 11 வீதமுமே ஏற்றுமதி செய்தன என்று அயல்நாட்டுச்செய்தி தெரிவிக்கின்றது.

* * *

ஸ்ரீமான் வி. ஜெ. பெட்டேல் இப்பொழுது அயர்லாந்தில் சுற்றுப்பிரயாணம் செய்துவருகின்றார். அவருக்கு அயர்லாந்து குடியரசுக்கட்சியின் தலைவரான டி. வாலராவும், மஹாஜனங்களும் சிறந்த வரவேற்பளித்தனர். அப்பொழுது ஒரு பொதுக் கூட்டத்தில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அயர்லாந்தும் இந்தியாவும் ஒரேவிதமான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றன என்று ஸ்ரீ பட்டேல் கூறினார்.

* * *

இந்திய வட்டமேஜை மஹாநாட்டு அங்கத்தினர் கூட்டம்:—வட்டமேஜை மஹாநாட்டின இந்திய அங்கத்தினர்களான ஸ்ரீமான்கள் ஸர் சேதல்வாட்கனம் சீனிவாஸ சாஸ்திரியார், M R. ஜெயகர், C. Y. சிந்தாமணி, திவான்பகதூர் ராமச்சந்திரராவ், ஸர் கௌவாஸ்ஜி ஜிஹாங்கிர், A. ரங்கசாமி ஐயங்கார், N. M. ஜோஷி, B. ஷிவராவ், B. ஜயதேவ் ஸர். பிரோஸிஷா செத்னு, S. B. தாம்பி, ஸர் டெஜ்பகதூர் சாப்ரு ஆயவர்கள் சேர்ந்து ஒரு கூட்டம் கூடிச் செய்த முடிவு வருமாறு:—

ஜுன் மாதம் 27ந்தேதி காமன்ஸ் சபையில் இந்தியாமந்திரி கூறிய மொழியும், ஜுலை 7ந் தேதி சாமுவல் ஹோர் என்பார் இந்திய விஷயமாய் நிகழ்த்திய கட்டுரையும், 1929-ம் வருஷம் அக்டோபர் மாதம் லார்ட் இர்வின் விடுத்த அறிக்கையைத் தழுவியதாகவிருக்கவில்லை. எனவே இறுதியான போக்கு இந்திய ஜனங்களுக்குத் திருப்தி தரும் முறையாக விருக்கவில்லை என்பதை நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம். வட்டமேஜை மஹாநாட்டின் ஆலோசனைக் கமிட்டியில் இனி இருக்கலாகாதென ஸ்ரீமான் ஜயகரும், ஸர் டெஜ்பகதூர் சாப்ருவும் ராஜிநாமாச் செய்ததை இக் கமிட்டியார் ஏற்கின்றனர்.

மதிப்புரை

தேவீ உபநிஷத் தீபிகை

இந்நூல், பிரம்மஸ்ரீ நாகேச்வர சாஸ்திரியாரவர்களின் குமாரரும் சிஷ்யரும், இதிஹாஸபுராண உபந்நியாஸகரும், அடையாறுவாசகசாலையின் சமஸ்கிருத வித்துவானுமாகிய நா. இராமநாத சாஸ்திரிகளால், சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாகும். அஷ்டோத்தர சதஉபநிஷத் என்னும் 108 உபநிஷத்துக்களில் தேவி விஷயமாயுள்ள நான்கு உபநிஷத்துக்களோடு வேறு ஒன்றுன சாக்ரோ உபநிஷத்தும்சேர்த்துத் தமிழில்மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இது தேவியின் மஹிமையைக் கூறுவதாகும். இந்த உபநிஷத்துக்களைச் செவ்வாய்க்கிழமைகளில் பாராயணம் செய்து தேவியை உபாஸித்தால் சகல நலனையும் எய்தலாம். ஆண் பெண் இருபாலாரும் படித்துப் பயனடையும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

தேவி விஷயமாயுள்ள, த்ரிபுரோபநிஷத் தேவ்யுபநிஷத், பஹ்வ்ருசோபநிஷத், பாவனோபநிஷத் என்னும் உபநிஷத்துக்களில் முதலாவதான திரிபுரோபநிஷத் என்பது மூன்று விதமான நம் சரீரத்திலும், இன்னும் மும்மூன்றுயுள்ள ஸகலத்திலும் தேவி நிறைந்திருப்பதையும் ஸகலத்திற்கும் காரணம் தேவி என்பதையும், தேவியின் அவதாரம், மந்தர விசேஷம் முதலியவைகளையும் விளக்கும். மற்ற மூன்று உபநிஷத்துக்களும் தேவியின் மகிமையையே விளக்குகின்றன. 5-வதாகச்சேர்க்கப்பட்டுள்ள சக்ரோபநிஷத் 108 உபநிஷத்துடன் சேராது போனாலும், இது எல்லோராலும் கொண்டாடப்படுகின்றதாகும். இது ஸ்திரீசக்ர விசேஷத்தை விளக்கிக் காட்டும். இந்த ஐந்து உபஷத்துக்களும் பாராயணத்திற்கு உரியவையென்று தொன்றுதொட்டெல்லோராலும் கொண்டாடப்படும். இவ்வரிய உபநிஷத்துக்கள் தமிழில் மொழிபெயர்ந்து வருவது மிகவும் அவசியமாகும். இவ்வரிய கருமத்தைச் செய்த ஆசிரியர் தமிழ் நாட்டார் பாராட்டலுக்குரியவராவர். இந்நூலின் விலை அணு 4. இதை எல்லோரும் படித்துப் பயனடையவேண்டுமென்பதே எமது விருப்பம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :	தைலங்கள்:
ச்யாவனப்ராச	அமிர்தாமலக
ஜீவஸுதா	பிருங்காமலக
பாதாமி லேகியம்	ஸுகுமார
தந்வந்தரி லேகியம்	ஹிமஸாகர



"பாலஸுதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)
காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்து மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணு)
ஸ்ப்ளிவரால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணு 4) கோரோஜனை மாத்திரை, (அணு 6) பால சஞ்சீவினி (அணு 4)
ச்யாவனப்ராசா பிருங்காமலக தைலம் கோரோஜனா மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
(தபால் பில்லையுடன் லிஸ்டுக்கு எழுதவும். அட்வான்ஸுடன்

KALANILAYAM
Reg. No. M. 2324.

— சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நெ:—3002

96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத் தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனேல் கவர்களும், திம்பிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்பிளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும். தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும, பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினல் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்.

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலங் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.

— தேகபலம் —

:: புத்திர சந்தானம் ::

இவைகளையடைய எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை உபயோகியுங்கள்.

சென்ற 51 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று வருகின்றன.

மேலும் தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.
5 டப்பிகள் ரூ. 4.

இனும்! காம சாஸ்திரம் இனும்!

கேட்போருக்கு இனமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., L.T.,
இயற்றிய

: : இராமாயண வினு விடை : :

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு 380 பக்கங்கள் கொண்டது. எழு சித்திரங்களும், அரிய நீதிகளும் தெளிவுவாய்ந்த அனுபந்தங்களும் அடங்கியது. விலை ரூபா 1 8 0

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)